




# தினபூமி

thinaboomi.com










**400 பி.அமெரிக்க டாலர்களை தாண்டிய முதல் நபரானார் எலான் மஸ்க் - புதிய சாதனை**

...2-ம் பக்கம்

**பாராளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம்**

...3-ம் பக்கம்

**ஒரு ஆண்டில் 4 சதங்கள்: இந்திய வீராங்கனை மந்தனா புதிய சாதனை**

...7-ம் பக்கம்





● தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கேரள மாநிலம் வைக்கத்தில், கேரள முதல்வர் பினராயி விஜயன் தலைமையில், தி.க. தலைவர் கி.வீரமணி முன்னிலையில் நடைபெற்ற வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில் புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகத்தை திறந்து வைத்தார். இவ்விழாவில் அமைச்சர்கள் துறைமுருகன், எ.வ.வேலு, மு.வெ.சாமிநாதன், திருமாவளவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கேரள மாநிலம் கோட்டயத்தில் பெரியார் நினைவகம், நூலகம்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, டிச. 13-

**கேரளாவின் வைக்கத்தில் நடைபெற்ற வைக்கம் போராட்டம் நூற்றாண்டு நிறைவு விழா-வில், புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் பெரியார் நூலகத்தை தமிழக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.**

இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கை விவரம்: கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்திலுள்ள மகாதேவர் கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களிலும், கோவிலுக்கு எதிரே உள்ள தெருவிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஈழவர்கள், தீயர்கள், புலையர்கள் முதலான சமுதாயத்தினர் நடந்து செல்லவே கூடாது என்னும் கொடிய தடை இருந்தது. அந்தத் தடையை நீக்கக் கோரி 1924-ஆம் ஆண்டு வைக்கம் போராட்டம் நடைபெற்றது.

தந்தை பெரியார் அனைத்து மக்களிடமும் வைக்கம் போராட்டம் குறித்து தமது சீர்திருத்த, சமூக நீதிக் கருத்துக்கள் மூலம் பிரச்சாரம் செய்ததால், போராட்டத்தில் பெருந்திரளான மக்கள் திரண்டதைக் கண்டு பொறுக்க முடியாத நிலையில், திருவாங்கூர் போலீஸார் தந்தை பெரியாரை கைது செய்து சிறையில் அடைத்தனர். முதல் முறை 1 மாதமும், இரண்டாவது முறை 4 மாதமும் கடுங்காவல் தண்டனை வழங்கி, தந்தை பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார். வைக்கம் நகரைச் சுற்றியிருந்த கிராம மக்களும் திரண்டு தொடர்ந்து போராடியதால் திருவாங்கூர் சமஸ்தான அரசு பணிந்து, மகாதேவர் கோயில் தெருக்களில் ஈழவர் முதலான வகுப்பார் நடந்து செல்வதற்கு இருந்த தடையை நீக்கி, எல்லோரும் செல்லலாம் என்று ஆணைபிறப்பித்தது. வைக்கம் போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றதால் தந்தை பெரியார் "வைக்கம் வீரர்" எனப் போற்றப்பட்டார்.

வரலாற்று சிறப்புமிக்க இந்த வைக்கம் போராட்டம் நடைபெற்று நூறு ஆண்டுகள் ஆனதையொட்டி, "வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டினையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 2023-ம் ஆண்டு மார்ச் 30-ம் நாள் தொடங்கி ஓராண்டு காலம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்" என்று தமிழக முதல்வர் சட்டமன்றப் பேரவையில் 30.03.2023 அன்று விதி 110-இன் கீழ் அறிவித்தார்.

அதன்படி, சென்னை, பெரியார் திடலில் 28.12.2023 அன்று நடைபெற்ற "வைக்கம் போராட்டம்" நூற்றாண்டு சிறப்பு விழாவில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' அச்சகத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட "வைக்கம் போராட்டம் (1924-2023) நூற்றாண்டு மலரினை" தமிழக முதல்வர் வெளியிட, கேரளா முதல்வர் பினராயி விஜயன் பெற்றுக்கொண்டார். இவ்விழாவில், "பெரியாரும் வைக்கம் போராட்டமும்" என்ற நூலை கேரளா மாநில முதல்வர் பினராயி விஜயன் வெளியிட்டார்.

வைக்கம் வீரர் தந்தை பெரியார் நினைவாக, அந்நகரில் தந்தை பெரியார் நினைவகமும், பெரியார் நூலகமும் தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டுள்ளது. தந்தை பெரியார், வைக்கம் போராட்டத்தில் பங்கேற்ற நூற்றாண்டு நிறைவினைக் கொண்டாடுவதற்காக வைக்கம் நகரில் உள்ள தந்தை பெரியார் நினைவகத்தையும், நூலகத்தையும் புதுப்பித்திட 8 கோடியே 14 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி முதல்வர் ஸ்டாலின் ஆணையிட்டார்.

அதன்படி, தமிழக அரசின் பொதுப்பணித் துறையால் புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தை தமிழக முதல்வர் நேற்று திறந்து வைத்தார்.

இப்பெரியார் நினைவகத்தில் புகைப்படக்காட்சிகூடம், திறந்த வெளி அரங்கம், சிறுவர் பூங்கா ஆகியவையும், நூலகத்தில், 5000-க்கும் மேற்பட்ட தமிழ், ஆங்கிலம் மற்றும் மலையாள மொழி புத்தகங்களும் இடம்பெற்றுள்ளன. அதனைத் தொடர்ந்து, 2024-ஆம் ஆண்டிற்கான வைக்கம் விருதினை கர்நாடக மாநிலம், மைசூரு மாவட்டத்தை சேர்ந்த எழுத்தாளரும், சமூக ஆர்வலருமான தேவநூர மஹாதேவாவுக்கு, விருதுடன் ஐந்து லட்சம் ரூபாய்க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பதக்கம் ஆகியவற்றை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மாநிலங்களின் கூட்டாட்சியை சிதைக்கும்

## 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டம்: முதல்வர் ஸ்டாலின் கடும் எதிர்ப்பு

### ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும் கருத்து

சென்னை, டிச. 13-

**'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டம் மாநிலங்களின் கூட்டாட்சியை சிதைக்கும் என்று எதிர்ப்பு தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டம் ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

**அமைச்சரவை ஒப்புதல்...**

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டத்துக்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்த முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையிலான உயர்மட்டக் குழு சமர்ப்பித்த அறிக்கையை, மத்திய அமைச்சரவை கடந்த செப்., 18ம் தேதி ஒருமனதாக ஏற்றுக் கொண்டது. தொடர்ந்து, 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' மசோதாவுக்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்துள்ளது. நடப்பு கூட்டத்தொடரிலே மசோதாவை தாக்கல் செய்ய மத்திய அரசு ஆயத்தமாகி உள்ளது.

**முதல்வர் கடும் எதிர்ப்பு**

இந்த நிலையில், ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது; "ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதாவை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது நடைமுறைக்கு மாறான ஜனநாயக விரோத நடவடிக்கை. 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டம் மாநிலங்களின் குரல்களை அழித்து கூட்டாட்சித்தன்மையை சிதைத்து ஆட்சியை சீர்குலைக்கும். இந்திய ஜனநாயகத்தின் மீதான இந்த தாக்குதலை முழு பலத்துடன் எதிர்ப்போம்.

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை

## ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவுக்கு ஒப்புதல்

புதுடெல்லி, டிச. 13-

**'ஒரே நாடு, ஒரே தேர்தல்' மசோதாவுக்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதனைத்தொடர்ந்து நடப்பு கூட்டத்தொடரிலே மசோதாவை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.**

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டத்துக்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்த முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையிலான உயர்மட்டக் குழு சமர்ப்பித்த அறிக்கையை, மத்திய அமைச்சரவை கடந்த செப்., 18ம் தேதி ஒருமனதாக ஏற்றுக் கொண்டது. 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த நிலையில், இது தொடர்பான மசோதா, பாராளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது.

இதனிடையே பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த மாதம் 25-ம் தேதி தொடங்கிய நாளில் இருந்து, அதானி லஞ்ச விவகாரத்தை எழுப்பி, தினமும் பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றன. மேலும் பாராளுமன்ற கூட்டுக்குழு அமைத்து விசாரணை நடத்த வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றன.

இந்த சூழலில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. தலைநகர் டெல்லியில் உள்ள பாராளுமன்ற வளாகத்தில் பிற்பகல் 1 மணிக்கு அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து விவாதிக்க வாய்ப்பு உள்ளதாகவும், அரசின் சில முக்கியத் திட்டங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' மசோதாவுக்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதனைத்தொடர்ந்து நடப்பு கூட்டத்தொடரிலே மசோதாவை தாக்கல் செய்ய மத்திய அரசு ஆயத்தமாகி உள்ளது.

நாடு முழுவதும் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' நடத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ள நிலையில், இது பாராளுமன்றம், மாநில சட்டமன்றங்களுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வகை செய்யும். 2029 தேர்தலுக்கு முன் சட்டத்தை அமல்படுத்த திட்டமிட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஏற்கனவே கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

வரும் 15-ம் தேதி

## அந்தமான் கடல் பகுதியில் புயல் சின்னம் உருவாகிறது

### இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, டிச. 13-

**வங்கக் கடலில் நிலவி வரும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலு குறையும் என்று இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டலத் தலைவர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார். மேலும் வரும் டிச.15-ம் தேதியை ஒட்டி, அந்தமான் கடற்பகுதியை ஒட்டி ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துள்ள சென்னை வானிலை ஆய்வு மையம், வடகிழக்குப் பருவமழை தற்போது வரை இயல்பைவிட 16 சதவீதம் அதிகமாக பெய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.**

சென்னையில் நேற்று (டிச.12) செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியது: "கடந்த 24 மணி நேரத்தில், தமிழகம் புதுவை காரைக்கால் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை மிக தீவிரமாக உள்ளது. கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள் மாவட்டங்களில் அநேக இடங்களிலும் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக நாகப்பட்டினம் மாவட்டம் கோடியக்கரையில் 18 செ.மீ மழை பதிவாகியுள்ளது. 4 இடங்களில் மிக கனமழையும், 72 இடங்களில் கனமழையும் பதிவாகியுள்ளது.

அடுத்து வரும் இரு தினங்களுக்கு தமிழகம் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். அடுத்து வரும் 24 மணி நேரத்தைப் பொறுத்தவரையில், வட மற்றும் தென் கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், நெல்லை, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதி கனமழைக்கும் வாய்ப்புள்ளது.

தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதி, லட்சத்தீவுப் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 35 முதல் 45 கி.மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இந்தப் பகுதிகளுக்கு இன்று செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். வடகிழக்குப் பருவமழையைப் பொறுத்தவரையில், கடந்த அக்.1-ம் தேதி முதல் நேற்று வரையிலான காலக்கட்டத்தில், தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பதிவான மழையின் அளவு 47 செ.மீ. இந்த காலக்கட்டத்தின் இயல்பளவு 40 செ.மீ. இது இயல்பைவிட 16 சதவீதம் அதிகம்.

மழை பெய்யும்போது பனிப்பொழி இருக்காது. காற்றழுத்த தாழ்வு பகுதியின் இயல்பால், விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. அது ஒரு வலு குறைந்த அமைப்பு என்பதால் அதில் நிறைய வேறுபாடுகள் இருக்கும். அதன் காரணமாக, ஏற்ற இறக்கத்துடன் மழைப்பொழிவு இருந்து வருகிறது. தற்போது வங்கக்கடலில் நிலவி வரும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலு குறையும். இதனால், மழையும் குறையும்.

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி மன்னார் வளைகுடா பகுதியில் நிலைகொண்டிருக்கிறது. தொடர்ந்து மிக மெதுவாக நகர்ந்து கொண்டிருக்கிறது. இதன் மேக கூட்டங்கள் மொத்தமாகவே தமிழகம் முழுவதும் பரவி இருக்கிறது. வரும்

**(கடைசி பக்கம் பார்க்க)**

## உலக செஸ் சாம்பியன்ஷிப் பட்டம் வென்றார் குகேஷ்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சிங்கப்பூர், டிச. 13-

**சீனாவை சேர்ந்த நடப்பு சாம்பியன் டிங் லிரெனை வீழ்த்தி உலக செஸ் சாம்பியன்ஷிப் பட்டத்தை தமிழக வீரர் குகேஷ் வென்று சாதனை படைத்துள்ளார். இந்திய மதிப்பில் ரூ. 20.8 கோடி பரிசுத்தொகை வழங்கப்படவுள்ளது. பட்டம் வென்ற குகேஷுக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

**14 சுற்று கொண்ட...**

இந்திய கிராண்ட்மாஸ்டர் குகேஷ், நடப்பு சாம்பியன்

சீனாவின் டிங் லிரென் இடையிலான உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடந்து வந்தது. 14 சுற்று கொண்ட இந்த போட்டியில் 13 சுற்றுகள் நிறைவடைந்த நிலையில், குகேசும், லிரெனும் தலா இரு ஆட்டங்களில் வெற்றி பெற்று இருந்தனர். மற்ற அனைத்து ஆட்டங்களும் டிராவில் முடிந்தன. முடிவில் இருவரும்



தலா 6.5 புள்ளிகளுடன் சமநிலையில் இருந்தனர்.

**கடைசி சுற்றுப் போட்டி...**

இந்த நிலையில், நேற்று 14-வது மற்றும் கடைசி சுற்று நடைபெற்று வந்தது. இதில் குகேஷ், கருப்பு நிற காய்களுடன் விளையாடினார். இறுதி சுற்றில் வெற்றி காணும் வீரர் உலக சாம்பியன் பட்டத்தை சொந்தமாக்குவார். இதுவும் டிராவில் முடிந்தால், அதன் பிறகு வெற்றியாளரை தீர்மானிக்க அதிவேகமாக காய்களை நகர்த்தும் சுற்று அடங்கிய டைபிரேக்கர் முறை கடைபிடிக்கப்படும்.

**விறுவிறுப்பாக..**

இத்தகைய சூழலில், போட்டி நேற்று பிற்பகலில் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வந்தது. இருவரும் தங்களது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தனர். போட்டி சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்று வந்தது. தொடக்கம் முதலே இருவரும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியதால், டிராவை நோக்கியே போட்டி செல்லும் என எதிர்பார்க்கப்பட்டது. குகேஷ் வெற்றி பெறுவது கடினம் என்றும், போட்டி டிராவை நோக்கியே செல்லும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.


**58-வது நகர்த்தலில்...**

ஆனால் சற்றும் எதிர்பாரா வகையில், 58-வது நகர்த்தலில் டிங் லிரெனை வீழ்த்தி குகேஷ் வெற்றி பெற்றார். இதன் மூலம் தமிழக வீரரான குகேஷ் உலக சாம்பியன் ஆனார். இதன் மூலம் 18 வயதிலேயே உலக செஸ் சாம்பியனாகி குகேஷ் வரலாறு படைத்துள்ளார். அவருக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வாழ்த்துகள் குவிந்து வருகின்றன. வெற்றி பெற்றுள்ள குகேஷுக்கு இந்திய மதிப்பில் ரூ. 20.8 கோடி பரிசுத்தொகையாக வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.


**முதல்வர் வாழ்த்து...**


இந்நிலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், "18 வயதில் உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற குகேஷுக்கு வாழ்த்துகள். உங்களது குறிப்பிடத்தக்க சாதனை இந்தியாவின் செஸ் பாரம்பரியத்தைத் தொடர்வதோடு, மற்றொரு உலகத் தரம் வாய்ந்த சாம்பியனை உருவாக்கி சென்னையை உலக செஸ் தலைநகராக உறுதிப்படுத்த உதவுகிறது. உங்களை நினைத்து தமிழகம் பெருமை கொள்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE | தங்கம் | வெள்ளி | டாலர் | பெட்ரோல் |
|---|---|---|---|---|---|
| -236.18 | -93.10 | 1 சவரன் ₹58,280 | 1 கிலோ ₹104,000 | ₹84.87 | ₹100.75 |
| பாயிண்ட் 81,289.96 | பாயிண்ட் 24,548.70 | 1 கிராம் ₹7,285 | 1 கிராம் ₹104.00 | | டீசல் ₹92.34 |







## 400 பி.டாலர்களை தாண்டிய முதல் நபர்:
# எலான் மஸ்க் புதிய சாதனை

**அமெரிக்கா, டிச. 13-**

400 பில்லியன் அமெரிக்க டாலர்களை தாண்டிய முதல் நபர் என்ற வரலாற்று சாதனையை எலான் மஸ்க் படைத்துள்ளார்.

உலக பணக்காரரான எலான் மஸ்க் புதிய சாதனையை படைத்துள்ளார். டெஸ்லா, ஸ்பெஸ்எக்ஸ் மற்றும் எக்ஸ் சமூக வலை தளம் ஆகியவற்றின் உரிமை யாளரான அவரது சொத்து மதிப்பு சமீபகாலமாக ஏற்றமடைந்து வருகிறது. அமெரிக்க அதிபர் தேர்தலில் டிரம்புக்கு எலான் மஸ்க் ஆதரவு அளித்தார். டிரம்ப் வெற்றி பெற்றதும் எலான் மஸ்க்கின் டெஸ்லா நிறுவன பங்குகள் 65 சதவீதம் விலை உயர்ந்துள்ளது. அதேபோல் அவரது மற்ற நிறுவன பங்குகளும் விலை அதிகரித்தது. இதனால் எலான் மஸ்க் சொத்து



மதிப்பு உயர்ந்தது.

இந்த நிலையில் உலக பணக்காரர்கள் பட்டியலில் நிகர சொத்து மதிப்பு 400 பில்லியன் அமெரிக்க டாலர்களை தாண்டிய முதல் நபர் என்ற வரலாற்று சாதனையை எலான் மஸ்க் படைத்துள்ளார். ப்ளூம் பெர்க் பில்லியனர்கள் பட்டியலில் எலான் மஸ்க்கின் சொத்து மதிப்பு 447 பில்லியன் அமெரிக்க டாலர்களை (இந்திய மதிப்பில் ரூ.37 லட்சம் கோடி) எட்டியுள்ளது. ஸ்பெஸ்எக்ஸ் நிறுவ னத்தின் முதலீட்டாளர்கள் 1.25 மில்லியன் டாலர் மதிப்பிலான பங்குகளை வாங்க ஒப்புக்கொண்டனர்.

இதையடுத்து எலான் மஸ்க்கின் தனிப்பட்ட சொத்தின் மதிப்பு 50 பில்லியன் டாலர் உயர்ந்து 440 பில்லியன் டாலராக அதிகரித்தது. மேலும் ஒரு ஒப்பந்தம் காரணமாக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன மதிப்பு சுமார் 350 பில்லியன் டாலராக உயர்ந்தது. இதனால் எலான்மஸ்க்குக்கு கிட்டத்தட்ட 20 பில்லியன் டாலர் சொத்து மதிப்பு உயர்ந்துள்ளது என்று ப்ளூம் பெர்க் தெரிவித்தது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து மஸ்க் தனது நிகர மதிப்பில் 218 பில்லியன் அமெரிக்க டாலர்களை சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் தாக்குதலில் 33 பாலஸ்தீனகள் பலி

**இஸ்ரேல், டிச. 13-**

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 33 பேர் உயிரிழந்ததாக பாலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்

காசா முனையில் இஸ்ரேல் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. அந்த வகையில், வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த வீட்டில் நேற்றிரவு இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 33 பேர் உயிரிழந்ததாக பாலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதில் பெரும்பாலானோர் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது. இஸ்ரேல் மற்றும் லெபனான் ஹிஸ்புல்லா இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டிய நிலையிலும், இஸ்ரேல் ஹமாஸ் இடையிலான போர் முடிவுக்கு வரவில்லை.

தற்போதைய அமெரிக்க அரசு மற்றும் புதிதாக ஆட்சி அமைக்க இருக்கும் அமெரிக்க நிர்வாகங்கள் அடுத்த ஆண்டு ஜனவரியில் புதிய அமெரிக்க அதிபர் பதவியேற்கும் முன் போரை முடிவுக்கு கொண்டுவர நம்பிக்கை தெரிவித்துள்ளன. எனினும், இது தொடர்பான போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து முடங்கி வருகின்றன.

சமீபத்திய தாக்குதலை மருத்துவமனையின் அருகாமையில் இருந்த ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து நடத்தியதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. பொதுமக்களுக்கு தீங்கு விளைவிப்பதைத் தவிர்க்க முயற்சிப்பதாக இராணுவம் கூறுகிறது. ஹமாஸ் அமைப்பினர் மக்கள் மத்தியில் மறைந்திருப்பதாக குற்றம் சாட்டுகிறது. இதனால் அவர்களின் உயிருக்கு ஆபத்து உள்ளது.

## சூடானில் திடீர் தாக்குதல்:
# 127 துணை ராணுவ படையினர் பலி

**கார்டும், டிச. 13-**

சூடானில் உள்நாட்டு கலவரம் நீடித்து வரும் நிலையில் துணை ராணுவப் படை வீரர்களின் முகாம்கள் மீது குண்டு வீசப்பட்டது. இதில் 127 பேர் உயிரிழந்தனர்.

சூடானில் உள்நாட்டு கலவரம் நீடித்து வரும் நிலையில் துணை ராணுவப் படை வீரர்களின் முகாம்கள் மீது குண்டு வீசப்பட்டது.

இதில் 127 பேர் உயிரிழந்தனர். ஆப்பிரிக்க நாடான சூடானில் கடந்த 2021-ம் ஆண்டு ராணுவம் ஆட்சியை கைப்பற்றியது.ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹான் ஆட்சியை நடத்தி வருகிறார். துணை ராணுவ படைப்பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவு படையினரை ராணுவத்துடன் இணைக்க ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹான் முயற்சி மேற்கொண்டார். இதற்கு துணை ராணுவப்படையின் அதிவிரைவு ஆதரவு படையினர் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது.

இதனால் ராணுவத்துக்கும், துணை ராணுவத்துக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. 2022-ம் ஆண்டு முதல் உள்நாட்டு போராக மாறி கடுமையான சண்டை நடைபெற்று வருகிறது.சுமார் 2 ஆண்டுகளாக நீடித்து வரும் இந்த போரில் பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அங்குள்ள கிராமங்களை துணை ராணுவப்படை வீரர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து ராணுவ ஆட்சியை கவிழ்க்க சதி திட்டம் வகுக்கின்றனர். இந்த நிலையில் துணை ராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்களை குறிவைத்து ராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் உள்பட 127 பேர் உயிரிழந்தனர். இதற்கு துணை ராணுவம் பதிலடி கொடுக்கும் என்பதால் உள்நாட்டு போர் தீவிரம் அடையும் என்று சொல்லப்படுகிறது.

## தென்கொரியாவில் பரபரப்பு:
# ராணுவ அமைச்சர் தற்கொலை முயற்சி

**சியோல், டிச 13-**

தென்கொரியாவில் ராணுவ அவசர நிலை பிறப்பித்ததற்கு எதிர்ப்புகளை கிளப்பிய நிலையில் தென்கொரியா ராணுவ அமைச்சர் தற்கொலை முயற்சித்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தென்கொரியாவில் கடந்த 3-ந்தேதி அதிபர் யூன் சுக் இயோல் திடீரென ராணுவ அவசர நிலையை பிரகடனப்படுத்தினார். பின்னர் மக்களின் கடும் எதிர்ப்பால் அவசர நிலையை வாபஸ் பெற்றார். இதற்கிடையே அவசர நிலையை அறிவிக்க தூண்டுதலாக இருந்ததாகவும், அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியதாகவும் அமைச்சர் கிம் யாங் ஹியூன் கைது செய்யப்பட்டுள்ளார்.

தலைநகர் சியோலில் உள்ள சிறையில் அவர் அடைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறது. அப்போது கழிவறைக்கு சென்ற அவர் தனது ஆடையை கிழித்து தூக்குப்போட்டு தற்கொலைக்கு முயன்றார்.

அவரை அங்கிருந்த போலீசார் மீட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

இதனை தொடர்ந்து தென்கொரியா அதிபர் அலுவலகத்தில் போலீசார் புகுந்து ரெய்டு நடத்தினர். இந்நிலையில் அந்த நாட்டில் தலைமறைவாக உள்ள தென்கொரியா அதிபர் யூன் சுக் இயோலை கைது செய்ய முக்கிய ஆவணங்கள் திரட்டப்பட்டு வருவதால் அவர் விரைவில் கைது செய்யப்படலாம் என என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருச்சி ஸ்ரீரங்கம் ரெங்கநாதருக்கு
# வைர கிரீடத்தை காணிக்கை வழங்கிய இஸ்லாமிய பக்தர்

**திருச்சி, டிச. 13-**

ஸ்ரீரங்கம் ரெங்கநாதருக்கு இஸ்லாமிய பக்தர் ஒருவர் வைர கிரீடத்தை காணிக்கையாக வழங்கினார்.

108 வைணவ தலங்களில் முதன்மையானது திருச்சி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவில். இக்கோவில் பூலோக வைகுண்டம் எனும் சிறப்புப் பெயரையும் பெற்றுள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளிநாடு, வெளிமாநிலத்தில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் தினமும் ஸ்ரீரங்கத்திற்கு வந்து செல்கின்றனர்.

இந்த நிலையில், ரெங்கநாத கோவிலின் உற்சவர் நம்பெருமாளுக்கு பல கோடி ரூபாய் மதிப்புள்ள வைர கிரீடத்தை பரதநாட்டிய கலைஞரான இஸ்லாமிய பக்தர் ஜாகிர் உசேன் என்பவர் கோவில் இணை ஆணையர் மாரியப்பன், தலைமை அர்ச்சகர் சுந்தர் பட்டர் ஆகியோரிடம் வழங்கினார். அப்போது கோவில் நிர்வாகம் சார்பில் அவருக்கு சால்வை அணிவிக்கப்பட்டு பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

# தங்கம் விலையில் மாற்றமில்லை

**சென்னை, டிச. 13-**

தங்கம் விலை இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்ட நிலையில், கடந்த அக்டோபர் மாதம் 30-ம் தேதி ஒரு சவரன் ரூ.59 ஆயிரத்தை கடந்து புதிய உச்சம் பெற்றது. நேற்று முன்தினம் தங்கம் விலை சவரனுக்கு ரூ.640 உயர்ந்த நிலையில் நேற்று மாற்றம் இன்றி விற்பனையானது. அதன்படி, 22 கேரட் ஆபரண தங்கம் ஒரு சவரன் ரூ.58,280-க்கு விற்பனையானது. ஒரு கிராம் ரூ.7,285-க்கு விற்பனையானது. வெள்ளி கிராமுக்கு ரூ.1 உயர்ந்து ஒரு கிராம் ரூ.104-க்கு விற்பனையானது.

# மழை குறித்து மக்கள் அச்சம் தேவையில்லை
## அமைச்சர் ராமச்சந்திரன் தகவல்

**ஸ்ரீவில்லிபுத்தூர், டிச: 13-**

தமிழக முதல்வர் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருவதால், மழைக்காக பயப்பட வேண்டிய அவசியமில்லை, என ஸ்ரீவில்லிபுத்தூரில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் மடவார் வளாகத்தில் ரூ.5.90 கோடி மதிப்பில் புதிய ஊராட்சி ஒன்றிய குழு அலுவலகம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தலைமை வகித்தார். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன், ஊராட்சி ஒன்றிய குழு அலுவலகம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

தமிழகத்தில் மழையின் தேவை இருப்பதால் மழை பெய்ய வேண்டும் என நினைக்கிறோம். அதிக மழை பெய்தால் அதை சமாளிக்கக்கூடிய தைரியம் இந்த அரசுக்கு உள்ளது. தமிழக முதல்வர் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருவதால் மழையை நினைத்து பயப்பட வேண்டிய அவசியமில்லை.

மாவட்ட நிர்வாகம், உள்ளாட்சி அமைப்புகள், நீர்வளத்துறை உள்ளிட்ட அனைத்து அரசுத்துறைகளையும் ஒருங்கிணைத்து மாவட்ட வாரியாக குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் சிரமப்படக்கூடாது என்பதற்காகவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது. அதிகம் மழை பெய்ய வாய்ப்புள்ள இடங்களில் நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

# அமெரிக்காவில் ராணுவத்திற்கு 884 பில்லியன் டாலர் ஒதுக்கீடு

**வாஷிங்டன், டிச. 13-**

அமெரிக்க நாடாளுமன்றத்தில் 2025-ம் ஆண்டிற்கான ராணுவ பட்ஜெட்டிற்கு 884 பில்லியன் டாலர் ஒதுக்கீடு செய்வதற்கான தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வாக்கெடுப்பின்போது, 281 எம்.பி.க்கள் ஆதரவாகவும், 140 எம்.பி.க்கள் இதற்கு எதிராகவும் வாக்களித்தனர்.

இதன்படி இந்தோ-பசிபிக் பகுதியில் அமெரிக்காவின் இருப்பை அதிகரிப்பது, ராணுவ ஊதியத்தை அதிகரிப்பது, ஏழு புதிய கப்பல்களை உருவாக்குவது மற்றும் நாட்டின் பாதுகாப்புத் துறையை வலுப்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் ராணுவ பட்ஜெட்டில் இடம்பெற உள்ளன. நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்த நிலையில், அடுத்ததாக செனட் சபையின் ஒப்புதலுக்காக இந்த தீர்மானம் அனுப்பி வைக்கப்படும்.

இது குறித்து சபாநாயகர் மைக் ஜான்சன் கூறுகையில்:- அமெரிக்காவையும், அதன் நலன்களையும் பாதுகாக்கும் முக்கிய ராணுவ பணிகளில் இந்த பட்ஜெட் கவனம் செலுத்தும். இது ராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்வில் சிறப்புமிக்க முதலீடுகளை செய்யும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**13-12-2024**




**மேஷம்:-** வாக்கு மேன்மையால் பணவரவு ஏற்படும். சந்ததி விருத்தி, பதவி உயர்வு, மனத்திருப்தி என அனைத்தும் இராஜயோகம்தான். வாகன மற்றும் போஜன சுகங்கள் கூடிவரும்.

**ரிஷபம்:-** தேவையற்ற பொருட்களை வாங்குவதால் வீட்டில் பெண்களால் பணவிரயம் ஏற்படும். இடைவிடாத பணி காரணமாக வேளைக்கு உணவருந்து முடியாத நிலை ஏற்படும். நாவடக்கம் தேவை.

**மிதுனம்:-** பிறருக்கு உதவி புரிவதால் பெரு மகிழ்ச்சி அடைவீர்கள். எதிர்பார்த்த தனவரவு கைக்கு வந்து சேரும். தானதர்மங்கள் ஆர்வம் ஏற்படும். மாணவர்களின் கல்வித்தரம் உயரும்.

**கடகம்:-** அரசு வழியில் பல நன்மைகளை எதிர்பார்க்கலாம். பதவி உயர்வின் மூலம் சம்பாத்தியமும், அந்தஸ்தும் உயரும். எல்லா வகையிலும் ஏற்றம் தரும் நாள்.

**சிம்மம்:-** இன்று உங்கள் காட்டில் மழைதான். அனைத்து பாக்கியங்களும் பெருகும். தெய்வ நம்பிக்கையால், வாழ்வில் திருப்பங்கள் ஏற்படும். தொழில் வியாபாரம் விருத்தி அடையும்.

**கன்னி:-** சோதனைகளையும் சாதனை ஆக்குவார்கள். வியாபார விருத்திக்கு கடினமான உழைப்பு தேவைப்படும். மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் கவனம் தேவை.

**துலாம்:-** பெரிய மனிதர்கள் தொடர்புகள் நல்லது நடக்கும். அரசு ஆதரவு கிடைக்கும். வளமான வாழ்க்கை வாசற்கதவைத் தட்டும். புகழ் ஓங்கும். விருப்பங்களும் கைகூடும்.

**விருச்சிகம்:-** பலவழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். காரியங்களில் கண்டிப்பாக வெற்றி கிடைக்கும். தன்னம்பிக்கையும், தைரியமும் பெருகும். பயணங்களில் நன்மைகள் ஏற்படும் நல்ல நாள்.

**தனுசு:-** வியாபாரத்தில் தன லாபம் அதிகரிக்கும். பிள்ளைகள் மேல் பாசம் அதிகரிக்கும். காரியம் யாவினும் கை கொடுப்பாள் மனைவி. நல்ல நண்பர்கள் சேர்க்கையும் ஏற்படும். உற்சாகம் பிறக்கும்.

**மகரம்:-** தூக்கம் குறைவதால், உடல் நலம் கெடும். அன்னையின் நலத்தில் அக்கறை கொள்ள வேண்டிய நாள். வியாபாரத்தில் திருப்திகரமான வரவுகள் இருக்காது.

**கும்பம்:-** நுட்பமான வேலைகளைச் சிறப்பாகச் செய்தாலும் நல்ல பெயர் இருக்காது. பிள்ளைகளின் ஆரோக்கியத்தைப் பேணிக் காப்பது நல்லது. பயணத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நாள்.

**மீனம்:-** முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும். கல்வியில் வெற்றி பெற கவனமாகப் படிக்கவும்.

## ஜனநாயகத்தை வளர விடாமல் அழிக்கிறது:
# ராமதாஸ் குற்றச்சாட்டு

**சென்னை, டிச 13-**

ஜனநாயகத்தை வளர விடாமல் அழிக்கும் பணியைத்தான் தி.மு.க. அரசு செய்கிறது என்று ராமதாஸ் கூறியுள்ளார்

இது குறித்து பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது- தமிழக சட்டப்பேரவையின் மழைக்காலக் கூட்டத்தொடர் இதுவரை இல்லாத வகையில் இரு நாட்கள் மட்டுமே நடைபெற்று முடிந்திருக்கிறது. விடுதலைக்கு பிந்தைய தமிழக சட்டப்பேரவையின் 72 ஆண்டு கால வரலாற்றில், சிறப்புத் தீர்மானங்களை நிறைவேற்றும் நோக்குடன் ஒரு நாள் மட்டும் கூட்டப்பட்ட கூட்டங்களைத் தவிர, ஒரு கூட்டத்தொடர் 2 நாட்கள் மட்டுமே நடைபெற்றிருப்பது இதுவே முதல் முறை.

அதேபோல், நடப்பாண்டில் ஒட்டுமொத்தமாக 18 நாட்களுக்கு மட்டும் தான் பேரவைக் கூடியிருக்கிறது. கடந்த 72 ஆண்டுகளில் மிகக் குறைந்த நாட்களுக்கு சட்டப்பேரவை நடைபெற்ற ஆண்டும் இது தான். அதிலும், கவர்னர் உரை, நிதிநிலை அறிக்கை, வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவை தாக்கல் செய்யப்பட்ட 3 நாட்களையும், விக்கிரவாண்டி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் புகழேந்தியின் மறைவு மற்றும் கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் குறித்து உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்து அவை ஒத்திவைக்கப்பட்ட நாளையும் கழித்து விட்டால், மொத்தம் 14 நாட்கள் மட்டும் விவாதங்கள் நடைபெற்றுள்ளன. அதிலும், துறை மானியக் கோரிக்கைகள் மீது 8 நாட்கள் மட்டுமே விவாதம் நடந்துள்ளது.

தமிழ்நாடு அரசில் மொத்தம் 55 துறைகள் உள்ளன. அவற்றின் மானியக் கோரிக்கைகள் மீது வெறும் 8 நாட்களில் விவாதம் நடத்தப்பட்டால், அது எந்த அளவுக்கு தரமானதாக இருக்கும்? ஆண்டுக்கு வெறும் 14 நாட்கள் மட்டுமே விவாதம் நடத்தப்பட்டால் 234 தொகுதிகளின் உறுப்பினர்களும் தங்கள் தொகுதியின் பிரச்சினைகள் குறித்து எந்த அளவுக்கு பேச முடியும்? என்ற அக்கறை தி.மு.க. அரசுக்கு சிறிதும் கிடையாது. அதிக நாட்களுக்கு அவைக் கூட்டம் நடைபெற்றால் தாங்கள் அதிக அளவில் அம்பலப்பட்டு விடுவோம் என்ற அச்சத்தின் காரணமாகவே மிகக் குறைந்த நாட்களுக்கு அவையை நடத்துகிறது.

பேரவைக் கூட்டங்களை மிகக்குறைந்த நாட்களுக்கு மட்டுமே நடத்துவது முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசுக்கு புதிதல்ல. 2021-ம் ஆண்டு பொறுப்பேற்ற தி.மு.க. அரசு, 2021-ம் ஆண்டில் 27 நாட்கள், 2022-ம் ஆண்டில் 34 நாட்கள், 2023-ம் ஆண்டில் 29 நாட்கள் மட்டுமே அவை நடந்திருக்கிறது. ஆண்டுக்கு 100 நாட்கள் அவையை நடத்துவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்த நிலையில், மொத்தமாக நான்காண்டுகளில் சேர்த்தும் கூட 108 நாட்களுக்கு மட்டும் தான் கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. அதாவது நான்காண்டுகளில் மொத்தம் 400 நாட்களுக்கு நடத்தப்பட வேண்டிய அவையை, அதில் 27% அளவுக்கு மட்டுமே நடத்தியிருக்கிறது திராவிட மாடல் அரசு.

உறுதியளிக்கப்பட்டதில், நான்கில் மூன்று பங்கு நாட்களுக்கு சட்டப்பேரவைக் கூட்டத்தை நடத்த மறுப்பதன் மூலம் ஜனநாயகத்திற்கு துரோகம் இழைத்துள்ளது. இதன் மூலம் மக்களின் பிரச்சினைகளும், ஆட்சியாளர்களின் மீதான குற்றச்சாட்டுகளும் விவாதிக்கப்படுவதை அரசு தடுத்திருக்கிறது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ஒரு சில துறைகளைத் தவிர, மற்றத் துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீது ஒரு நாளைக்கு ஒரு மானியக் கோரிக்கை என்ற அளவில் விவாதம் நடைபெறும்.

ஒரே அமைச்சரிடம் இரு பெரிய துறைகள் இருந்தால், அவர் துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீது இரு நாட்கள் விவாதம் நடக்கும். உள்துறை மானியக் கோரிக்கை மீது இரு நாட்களுக்கு விவாதம் நடைபெறும். பின்னர், இந்த வழக்கம் ஓர் அமைச்சரின் துறைகளுக்கு ஒரு நாள் என்ற அளவில் சுருங்கியது. ஆனால், நடப்பாண்டின் நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடரில் ஒவ்வொரு நாளும் சராசரியாக 7 துறைகளின் மானியக்கோரிக்கைகளை தாக்கல் செய்து, அதில் சராசரியாக 7 பேரைக் கூட பேச விடாமல் விவாதம் நடத்தும் அளவுக்கு பேரவை அலுவல் நேரம் குறைக்கப்பட்டிருக்கிறது.

2021-ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கையில் 375-ம் வாக்குறுதியாக நாடாளுமன்றம் மற்றும் சில மாநிலங்களின் சட்டப்பேரவைகளின் கூட்ட நிகழ்ச்சிகள் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுவதைப் போன்று தமிழக சட்டப்பேரவை நிகழ்ச்சிகளும் நேரலை செய்யப்படும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால், அந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. வினா&விடை நேரம் மட்டுமே முழுமையாக நேரலை செய்யப்படும் நிலையில், மற்ற தருணங்களில் ஆளுங்கட்சியினரின் உரைகளும், அவர்களை புகழ்ந்து பாடுபவர்களின் உரைகளும் மட்டும்தான் நேரலை செய்யப்படுகின்றன. அரசுக்கு எதிராக எவரேனும் பேசினால் உடனடியாக நேரலை ரத்து செய்யப்படுகிறது. எதிர்க்கட்சிகளைக் கண்டு ஆளுங்கட்சி ஏன் இந்த அளவுக்கு அஞ்சி நடுங்குகிறது? என்பது தெரியவில்லை.

சட்டப்பேரவைகள்தான் ஜனநாயகத்தின் நாற்றங்கால்கள். அங்கிருந்துதான் ஜனநாயகம் தழைக்க வேண்டும். ஆனால், நாற்றங்கால்களையே கருகச் செய்து ஜனநாயகத்தை வளர விடாமல் அழிக்கும் பணியைத்தான் தி.மு.க. அரசு செய்கிறது. அனைத்தையும் தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

சரியான நேரத்தில், சரியான முறையில், சரியான தண்டனையை அவர்கள் தருவார்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தனுஷ் தொடர்ந்த வழக்கில்
# நயன்தாரா, விக்னேஷ் சிவனுக்கு சென்னை ஐகோர்ட் நோட்டீஸ்

**சென்னை, டிச. 13-**

நடிகை நயன்தாராவுக்கு எதிராக நடிகர் தனுஷின் உண்டர் பார் நிறுவனம் தொடர்ந்த வழக்கில், நயன்தாரா, விக்னேஷ் சிவன் மற்றும் நெட்ஃபிளிக்ஸ் நிறுவனம் பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெட்ஃபிளிக்ஸில் வெளியாகி இருக்கும் நயன்தாரா ஆவணப்படத்தில் 'நானும் ரவுடிதான்' படத்தின் காட்சிகளை பயன்படுத்திய காரணத்துக்காக நயன்தாராவுக்கு ரூ.10 கோடி நஷ்டஈடு கேட்டு நோட்டீஸ் அனுப்பினார். அந்த படத்தின் தயாரிப்பாளர் தனுஷ். இந்த நோட்டீசுக்கு நயன்தாரா, சட்டப்பூர்வமான உங்களது நடவடிக்கைகளை எதிர்கொள்ள நாங்களும் தயாராகவே இருக்கிறோம். 'நானும் ரவுடிதான்' படம் சம்பந்தப்பட்ட காட்சிகளுக்கும், பாடல்களுக்கும் தடையில்லா சான்றிதழ் வழங்காததற்கான காப்புரிமை காரணங்களை நீங்கள் நீதிமன்றத்தில் விளக்கிக் கொள்ளுங்கள். ஆனால், மன்றத்தில் நீங்கள் தெளிவுப்படுத்த வேண்டிய சில விஷயங்கள் இருக்கின்றன, என்று பதிலளித்திருந்தார் .

நடிகை நயன்தாராவுக்கு எதிராக நடிகர் தனுஷின் உண்டர் பார் நிறுவனம் தரப்பில் வழக்குத் தொடர அனுமதி கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், வழக்குத் தொடர அனுமதியளித்து உத்தரவிட்டிருந்தது. இதையடுத்து, 'ஆவணப்படத்தில், அனுமதியின்றி காட்சிகளை பயன்படுத்தியதற்காக ரூ.10 கோடி இழப்பீடு வழங்கவும், காட்சிகளை பயன்படுத்த தடைவிதிக்கக் கோரியும் உண்டர் பார் நிறுவனம் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதி அப்துல் குத்தூஸ் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, இந்த மனுவுக்கு நடிகை நயன்தாரா, இயக்குநர் விக்னேஷ் சிவன், மற்றும் நெட்ஃபிளிக்ஸ் நிறுவனத்துக்கு உத்தரவிட்டார். மேலும், தாக்கல் செய்யப்படும் பதில்மனுவுக்கு தனுஷ் தரப்பிலும் பதிலளிக்க உத்தரவிட்டார். இந்த வழக்கில் இடைக்கால தடை கோரும் மனு மீது வருகிற ஜனவரி 8-ம் தேதி இறுதி விசாரணை நடத்தப்படும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

# பூண்டி ஏரியில் இருந்து உபரி நீர் திறப்பு

**சென்னை, டிச. 13-**

சென்னையின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் பூண்டி ஏரியின் மொத்த கொள்ளளவான 3,231 மில்லியன் கன அடி. இந்த ஏரிக்கு நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழை மற்றும் ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்படும் கிருஷ்ணா நதி நீர் ஆகியவை முக்கிய நீர் ஆதாரங்களாக பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் தான் ஃபெஞ்சல் புயல் காரணமாகவும் தற்போது பெய்துவரும் மழை காரணமாகவும் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

இதில், ஏற்கெனவே கடந்த செப்டம்பர் 23-ம் தேதி முதல் ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்டு வரும் கிருஷ்ணா நதி நீர் விநாடிக்கு 300 கன அடி என்ற வீதத்தில் வந்து கொண்டிருக்கிறது. நீர்பிடிப்பு பகுதியில் பெய்துவரும் மழை காரணமாக விநாடிக்கு 990 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இதன் காரணமாக அதன் மொத்த கொள்ளளவான 3,231 மில்லியன் கன அடியில் 2,839 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. மொத்த உயரமான 35 அடியில் 34.05 அடி நீர் மட்டம் உள்ளது.

இந்நிலையில் பூண்டி ஏரி 88 சதவீதம் நிரம்பியுள்ளது. இதனால் நீர் வரத்தை தொடர்ந்து கண்காணித்து வரும் நீர் வள ஆதாரத் துறையினர், நேற்று மதியம் 1.30 மணியளவில் இருந்து விநாடிக்கு ஆயிரம் கன அடி உபரி நீரை கொசஸ் தலை ஆற்றில் திறந்து விட உள்ளதாக தெரிவித்துள்ளனர். மேலும், உபரி நீர் திறப்பு காரணமாக கொசஸ் தலை ஆற்றுக்கரையோர பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு நீர் வள ஆதாரத் துறையினர் முதற்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கையை விடுத்துள்ளது.

### பிரதமர், அதானிக்கு எதிராக கோஷம்:

# பாராளுமன்ற வளாகத்தில் இன்டியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம்



**புதுடெல்லி, டிச. 13-**

பிரதமர் மோடி, அதானிக்கு எதிராக கோஷங்களை எழுப்பியும், நாட்டை விற்க விடமாட்டோம் என்ற பதாகைகளை ஏந்தி இன்டியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம் நடத்தினர்.

சூரிய மின்சார விநியோகம் தொடர்பான முதலீடுகளை பெற இந்திய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்ததாகவும், சூரிய ஒளி மின் உற்பத்தி முதலீட்டாளர்களை ஏமாற்றி மோசடி செய்ததாகவும் அதானி குழுமம் மீது அமெரிக்காவில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு தொடர்பாக அதானிக்கு நியூயார்க் கோர்ட்டு பிடிவாரண்டு பிறப்பித்தது.

இந்த விவகாரம் பூதாகரமான நிலையில் தன் மீதும் தனது நிறுவனம் மீதும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டுள்ளதாக அதானி தெரிவித்து வருகிறார். இதனிடையே, அதானி விவகாரம் தொடர்பாக பாராளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்த வேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. ஆனால், அந்த கோரிக்கையை மத்திய அரசு ஏற்கவில்லை.

இந்நிலையில், அதானி விவகாரம் தொடர்பாக பாராளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்த உத்தரவிடக் கோரி இன்டியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற இந்த போராட்டத்தில் காங்கிரஸ், திமுக மற்றும் இடதுசாரிக் கட்சிகளை சேர்ந்த எம்.பி.க்கள் கலந்துகொண்டனர். போராட்டத்தின்போது, நாட்டை விற்க விடமாடோம் என்ற பாதகைகளை ஏந்தியும், பிரதமர் மோடி, அதானிக்கு எதிராக கோஷங்களை எழுப்பியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### 84-வது பிறந்தநாள்:

# சரத்பவாருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை, டிச 13-**

சரத்பவாருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தேசியவாத காங்கிரஸ் (எஸ்.பி.) கட்சி தலைவர் சரத்பவார் நேற்று தனது 84-வது பிறந்தநாளை கொண்டாடினார். இதையொட்டி அவருக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர். அந்த வகையில், சரத்பவாருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது- தேசியவாத காங்கிரஸ் (எஸ்.பி.) கட்சியின் தலைவர் சரத்பவார் அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த பிறந்தநாள் வாழ்த்துகள். பொதுவாழ்விலும் நாட்டின் வளர்ச்சியிலும் தங்களது அளப்பரிய பங்களிப்புகள் பெரும் ஊக்கமாக விளங்குகின்றன. தங்களது சீரிய தலைமை தொடர, நல்ல உடல்நலத்துடனும் வலிவோடும் தாங்கள் திகழ விழைகிறேன் என்று கூறியுள்ளார்.

### 75-வது பிறந்தநாள்:

# நடிகர் ரஜினிகாந்த்துக்கு முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்டோர் வாழ்த்து

**சென்னை, டிச. 13-**

நடிகர் ரஜினியின் 75-வது பிறந்தநாளை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின், இ.பி.எஸ். உள்ளிட்ட தலைவர்கள் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில், "எல்லைகள் கடந்து ஆறிலிருந்து அறுபதுவரை அனைவரையும் தன்னுடைய நடிப்பால் - ஸ்டைலால் ரசிகர்களாக்கிக் கொண்ட அருமை நண்பர் 'சூப்பர்ஸ்டார்' ரஜினிகாந்த் அவர்களுக்கு என் பிறந்தநாள் நல்வாழ்த்துகள்! திரையுலகில் தொடர் வெற்றிகளைக் குவித்து வரும் தாங்கள், எப்போதும் அமைதியோடும் மனமகிழ்ச்சியோடும் திகழ்ந்து மக்களை மகிழ்வித்திட விழைகிறேன்" என தெரிவித்துள்ளார்.

அதிமுக பொதுச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி, "தன் தனித்துவமான நடிப்பாற்றலால் உலகளாவிய ரசிகர் பட்டாளம் கொண்டவரும், என்றும் பழகுவதற்கு இனியவருமான அன்பு நண்பர் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த்துக்கு எனது இதயங்கனிந்த பிறந்த நாள் நல்வாழ்த்துகள். திரையுலக வாழ்வில் பொன்விழா ஆண்டில் உள்ள அன்பு நண்பர் ரஜினிகாந்த், இன்னும் பல்லாண்டு பூரண உடல் நலத்துடன் ரசிகர்களை மென்மேலும் மகிழ்விக்க வாழ்த்துகிறேன்" என குறிப்பிட்டுள்ளார். ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "என் அன்பு நண்பர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்துக்கு பிறந்த நாள் வாழ்த்துகள்! அவர் நல்ல ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியுடனும் இருக்கவும், அவரது அனைத்து முயற்சிகளிலும் வெற்றி தொடரவும் வாழ்த்துகள்" என கூறியுள்ளார். முன்னாள் ஆளுநரும் பாஜக மூத்த தலைவருமான தமிழிசை சவுந்தரராஜன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், "சகோதரர் ரஜினிகாந்த்துக்கு எனது மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள். கடவுள் அவருக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தையும் அனைத்து மகிழ்ச்சியையும் அளிக்கட்டும்" என தெரிவித்துள்ளார்.

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, "எளிய பின்னணியில் இருந்து வந்து, தனது கடும் உழைப்பாலும், மேன்மையான பண்புகளாலும், இந்தியத் திரையுலகின் அடையாளங்களில் ஒருவராக உயர்ந்திருக்கும், அன்புக்கும் மரியாதைக்கும் உரிய, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்துக்கு இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக மூன்று தலைமுறைகளை, தனது வசீகரத்தால் கட்டிப் போட்டிருக்கும் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், மேலும் பல்லாண்டுகள் நலமுடன் ஆரோக்கியத்துடன் வாழ, இறைவனை வேண்டிக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

பா.ம.க. தலைவர் அன்புமணி இராமதாஸ் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "நடிகர் நண்பர் ரஜினிகாந்த் இன்று 75-ஆம் பிறந்த நாளைக் கொண்டாடும் நிலையில், அவருக்கு எனது இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் நல்ல உடல்நலத்துடன் நூறாண்டுகள் வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மாநில காங்கிரஸ் (மூ) தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "மதிப்பிற்குரிய நடிகர் ரஜினிகாந்த்துக்கு பிறந்த நாள் வாழ்த்துகளை தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் நல்ல உடல் நலத்துடன் நீடுடி வாழ இறைவனை வேண்டுகிறன்" என குறிப்பிட்டுள்ளார்.

### இந்துக்களுக்கு எதிரான தாக்குதல்கள்:

# வங்கதேசத்துக்கு மேற்குவங்க பா.ஜ.க. தலைவர் எச்சரிக்கை

**கொல்கத்தா, டிச. 13-**

மேற்கு வங்கத்தில் 40 ரஃபேல் விமானங்கள் உள்ளன; இரண்டை அனுப்பினாலே போதும் என்று வங்கதேசத்துக்கு மேற்கு வங்க பாஜக மூத்த தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வங்கதேசத்தில் இந்துக்களுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்து வரும் நிலையில், இதனை கண்டித்து இந்தியா முழுவதும் போராட்டம் நடைபெறுகிறது. குறிப்பாக வங்கதேச எல்லையை ஒட்டியுள்ள மேற்கு வங்க மாநிலத்தில் தீவிரமாக போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இந்தியா-வங்கதேச எல்லை அருகே உள்ள பசிர்ஹத் நகரின் ஹஜ்ரதலா பகுதியில் ஆர்ப்பாட்ட பேரணி நடைபெற்றது. இதில் ஏராளமான மக்கள் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் பாஜக மூத்த தலைவரும், மேற்கு வங்க சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவருமான சுவேந்து அதிகாரி கலந்து கொண்டு பேசியதாவது: வங்கதேசம் தனது போக்கை மாற்றிக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், இந்துக்கள் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்தாவிட்டால் வங்கதேசத்தை எப்படி சமாளிப்பது என்று இந்தியாவுக்குத் தெரியும். பெரும்பாலான தேவைகளுக்கு இந்தியாவை நம்பி உள்ள வங்கதேசத்துக்கான ஏற்றுமதியை காலவரையின்றி தடை செய்யவேண்டியிருக்கும்.

நாம் மின்சாரத்தை நிறுத்தினால் வங்கதேச நாடே இருளில் மூழ்கிவிடும். இந்திய ராணுவத்தின் ரஃபேல் 40 போர் விமானங்கள் ஹசிமாரா பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டை அனுப்பினாலே போதுமானது. நமது பிரதமர் நரேந்திர மோடி, அயோத்தி பிரச்சினைக்கு தீர்வு கண்டால். ஜம்மு-காஷ்மீரில் 370-வது பிரிவை ரத்து செய்தார். வங்கதேசம் நமது பொறுமையை சோதிக்கக் கூடாது. 1971-ல் அந்த நாடு சுதந்திரம் பெறுவதற்காக நாம் 17,000 ராணுவ வீரர்களை தியாகம் செய்தோம். தேவைப்பட்டால் மீண்டும் அதேபோன்ற நடவடிக்கை எடுப்போம். இவ்வாறு சுவேந்து அதிகாரி பேசினார்.

### சத்தீஷ்கரில் என்கவுன்டர்:

# 7 நக்சலைட்டுகள் சுட்டுக்கொலை

**ராய்ப்பூர், டிச. 13-**

சத்தீஷ்கரில் நடந்த என்கவுன்டரில் 7 நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் நக்சலைட்டுகள் ஆதிக்கம் மிகுந்த மாநிலங்களில் ஒன்றான சத்தீஷ்கரில் அவ்வபோது பாதுகாப்புப்படையினருக்கும் நக்சலைட்டுகளுக்கும் இடையே என்கவுன்டர் நடைபெற்றது. அந்த வகையில், சத்தீஷ்கரின் நாராயண்பூர் மாவட்டத்தில் உள்ள அபுஜ்மாத் வனப்பகுதியில் நக்சலைட்டுகள் நடமாட்டம் இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அந்த இடத்தை சுற்றி வளைத்து தீவிர தேடுதல் வேட்டையில் பாதுகாப்புப்படையினர் ஈடுபட்டனர். அப்போது, அங்கு மறைந்திருந்த நக்சலைட்டுகளுக்கும், பாதுகாப்புப்படையினருக்கும் இடையே நேற்று அதிகாலை 3 மணியளவில் துப்பாக்கி சண்டை ஏற்பட்டது.

இந்த மோதலில் நக்சலைட்டுகள் 7 பேர் கொல்லப்பட்டனர். சுட்டுக்கொல்லப்பட்ட 7 நக்சலைட்டுகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. உடல்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும் சில நக்சலைட்டுகள் அப்பகுதியில் பதுங்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பாதுகாப்புப்படையினர் அங்கு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

### தீவிரவாத செயல் சந்தேகம்:

# 3 மாநிலங்களில் என்.ஐ.ஏ. சோதனை

**புதுடெல்லி, டிச. 13-**

ஜம்மு-காஷ்மீர், உ.பி. உள்ளிட்ட 19 இடங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர்.

பாகிஸ்தானை சேர்ந்த ஜெய்ஷ்-இ-முகமது இயக்கம் இளைஞர்களை தீவிரவாதிகளாக ஆக்கி இந்தியாவில் பயங்கரவாதத்தை பரப்பும் சதித்திட்டத்தின் விசாரணையின் ஒரு பகுதியாக தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ.) அதிகாரிகள் நேற்று ஜம்மு-காஷ்மீர், உ.பி. உள்ளிட்ட 19 இடங்களில் அதிரடி சோதனை நடத்தினர்.

இந்த சோதனையானது உத்தரபிரதேசம் உள்ளிட்ட 3 மாநிலங்களிலும், ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்திலும் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. ஜம்மு காஷ்மீரில் அனந்த்நாக், பாரமுல்லாவில் மற்றும் புட்காம் மாவட்டங்களில் இன்று அதிகாலை என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

# சனாதன தர்மம் கூறியது என்ன? தமிழக கவர்னர் ரவி விளக்கம்

**குமரி, டிச. 13-**

அனைவரும் ஒரே கடவுளைத்தான் வழிபட வேண்டும் என சனாதன தர்மம் கூறவில்லை என்று கவர்னர் ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

அகிலத்திரட்டு அம்மானை, அய்யா வழி பக்தர்களின் புனித நூலாகும். அய்யா வைகுண்டசுவாமி இந்த அகிலத்திரட்டு அம்மானை நூலை அருளிய நாள் கார்த்திகை மாதம் 27-ம் தேதி ஆகும். இந்த நாளை அய்யாவழி பக்தர்கள் ஒவ்வொரு வருடமும் அகிலத்திரட்டு உதய தினமாகக் கொண்டாடி வருகின்றனர்.

இந்த நிலையில் கன்னியாகுமரி மாவட்டம் சாமிதோப்பு பகுதியில் நடைபெற்ற அகிலத்திரட்டு அம்மானை உதய தின விழாவில் கவர்னர் ஆர்.என். ரவி பேசுகையில், அனைவரும் ஒன்று, அனைவரும் சமம் என்பதைத்தான் சனாதன தர்மம் கூறுகிறது. அனைவரும் ஒரே கடவுளைத்தான் வழிபட வேண்டும் என்று சனாதன தர்மம் கூறவில்லை. வேறு மொழி பேசலாம்.வேறு உடை அணியலாம். ஆனாலும் நாம் அனைவரும் ஒன்றுதான் என்று பேசினார்.

### சென்னையில் தொடரும் கனமழை:

# 15 விமானங்களின் சேவைகள் பாதிப்பால் பயணிகள் அவதி

**சென்னை, டிச. 13-**

சென்னையில் புதன்கிழமை இரவு முதல் தொடர்ந்து பெய்து வரும் கனமழை மற்றும் மோசமான வானிலை காரணமாக வருகை, புறப்பாடு என வியாழக்கிழமை 15 விமானங்களின் சேவைகள் பாதிக்கப்பட்டன. இதனால் பயணிகள் கடும் அவதிகுள்ளாகினர்.

சென்னையில் புதன்கிழமை இரவு முதல் தொடர்ந்து பெய்து வரும் கனமழை மற்றும் மோசமான வானிலை காரணமாக வருகை, புறப்பாடு என வியாழக்கிழமை 15 விமானங்களின் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை கடலோரப் பகுதிகளை யொட்டிய தென்மேற்கு வங்கக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து வியாழக்கிழமை இலங்கை மற்றும் தமிழக கடலோரப் பகுதியை நோக்கி நகர்ந்து வருகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், புதுச்சேரி, காரைக்காலிலும் அடுத்த 4 நாள்களுக்கு இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. மேலும், டிச.12-ஆம் தேதி சென்னை தொடங்கி தூத்துக்குடி வரை உள்ள கடலோர மாவட்டங்கள் மற்றும் அதையொட்டியுள்ள மாவட்டங்களிலும், உள் மாவட்டங்களிலும், டெல்டா பகுதியிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் புதன்கிழமை பரவலாக மழை பெய்த நிலையில், டிச.12- ஆம் தேதியும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதால் 'மஞ்சள்' எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சென்னையில், புதன்கிழமை இரவு முதல் பெய்து வரும் தொடர் கனமழை மற்றும் கனமழை எச்சரிக்கை காரணமாக, சென்னை மாவட்டத்தில் வியாழக்கிழமை (டிச.12) பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவித்து மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில், சென்னையில் புதன்கிழமை அதிகாலை முதல் தொடர்ந்து பெய்து வரும் கனமழை மற்றும் மோசமான வானிலை காரணமாக வருகை, புறப்பாடு என வியாழக்கிழமை 15 விமானங்களின் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் புதன்கிழமை அதிகாலை முதல் காற்றுடன், கனமழை பெய்து வருகிறது. இதனால் சென்னை விமான நிலையத்தில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன. தொடர்ந்து மழை பெய்து வருவதால், சென்னை விமான நிலையத்தில் இருந்து சார்ஜா, துபை, அபுதாபி, இலங்கை, சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு செல்லக்கூடிய விமானங்கள் தாமதமாக புறப்பட்டுச் சென்றன. தில்லி, மும்பை, திருச்சி, கோவை, கொச்சி புறப்படும் விமானங்களும் தாமதமாக புறப்பட்டுச் சென்றன.

அதேபோன்று சென்னையில் தரையிறங்க வேண்டிய அனைத்து விமானங்களும் மோசமான வானிலை காரணமாக தரையிறங்க முடியாமல், தொடர்ந்து வானில் வட்டமடித்து பறந்தன. மழை சற்று ஓய்ந்த பின்பு, இந்த விமானங்கள் ஒன்றன்பின் ஒன்றாக சென்னையில் தரையிறங்கின. சென்னை வரும் விமானங்கள் அனைத்தும் பத்து முதல் இருபது நிமிடங்கள் வரை தாமதமாக தரையிறங்கின. இதனால் சென்னை விமான நிலையத்தில் புறப்பாடு மற்றும் வருகை என 15 விமானங்கள் தாமதமானதால் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகினர்.

### 55 மணிநேர போராட்டம் வீண்:

# ஆழ்துளை கிணற்றில் விழுந்த சிறுவன் பலி

**ஜெய்பூர், டிச. 13-**

ராஜஸ்தானில் ஆழ்துளை கிணற்றில் விழுந்த சிறுவனை மீட்கும் 55 மணிநேர போராட்டம் வீணானது. சிறுவன் உயிரிழந்த சம்பவம் அங்கு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் தௌசாவில் 150 அடி ஆழமுள்ள ஆழ்துளை கிணற்றில் 5 வயது சிறுவன் ஆர்யன் தவறிவிழுந்துள்ளார். 55 மணி நேரத்துக்கும் மேலான மீட்புப் பணிகளுக்குப் பிறகு, நேற்று முன்தினம் இரவு ஆழ்துளை கிணற்றில் இருந்து வெளியே எடுக்கப்பட்ட அவர், மயக்க நிலையில் ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு சிறுவனை பரிசோதித்த மருத்துவர்கள், அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து காவல்துறையினர் கூறுகையில், "ஆழ்துளையில் இருந்து மீட்கப்பட்ட சிறுவனுக்கு அனைத்து உயிர்க்காக்கும் வசதிகளும் செய்யப்பட்டது. இருப்பினும், சிறுவன் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்" என்றனர். கடந்த டிசம்பர் 9-ஆம் தேதி பிற்பகல் 3 மணியளவில் கலிகாட் கிராமத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஆர்யன் விளையாடிக் கொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக அவரது தாய் கண் முன்னே ஆழ்துளை கிணற்றில் விழுந்துள்ளார். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு அவரை மீட்கும் பணியில் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

மீட்புக் குழுவினர் அங்கு வந்தவுடன், குழாய் மூலம் சிறுவனுக்கு ஆக்ஸிஜன் வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. பின்னர் உள்ளே நடவடிக்கைகளை கண்காணிக்க கேமராவும் அனுப்பப்பட்டது. சிறுவனை மீட்க ஆழ்துளை கிணற்றை ஒட்டியே அதற்கு இணையாக மற்றொரு குழி தோண்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து தேசிய பேரிடர் மீட்புப் படை பணியாளர்கள் கூறுகையில், "சிறுவனை மீட்கும் பணியில் எண்ணற்ற சவால்கள் இருந்தன. அந்தப் பகுதியில் நீர்மட்டம் 160 அடியாக இருந்தது. குழந்தையின் எந்த அசைவையும் கேமராவில் படம்பிடிப்பது கடினம். மீட்பு பணியாளர்களின் பாதுகாப்பும் மிகவும் முக்கியம்" எனத் தெரிவித்துள்ளனர்.

### அலகாபாத் ஐகோர்ட் நீதிபதியை பதவி நீக்க

# பார்லி.யில் தீர்மானம் கொண்டு வர எதிர்க்கட்சியினர் முடிவு

**புதுடெல்லி, டிச 13-**

விஸ்வ இந்து பரிஷத் நிகழ்ச்சியில் சர்ச்சைக்குரிய வகையில் பேசிய நீதிபதியை பதவி நீக்கம் செய்ய பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

அலகாபாத் ஐகோர்ட் நீதிபதி சேகர் யாதவ் சமீபத்தில் நடந்த விஸ்வ இந்து பரிஷத் நிகழ்ச்சியில் பங்கேற்றார். அதில் பேசிய அவர், பெரும்பான்மையினருக்கு ஆதரவான சட்டம் உள்பட பல்வேறு சர்ச்சைக்குரிய விஷயங்களை குறிப்பிட்டு இருந்தார். இது எதிர்க்கட்சியினர் மற்றும் சிறுபான்மையினரிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. அவரது பேச்சை வெறுப்பு பேச்சாக சுட்டிக்காட்டியுள்ள எதிர்க்கட்சிகள், அவரை பதவி நீக்கம் செய்ய பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர நடவடிக்கை எடுத்து உள்ளன.

இதற்காக 50 எம்.பி.க்களிடம் கையெழுத்து பெறும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ள அவர்கள், நடப்பு குளிர்கால கூட்டத்தொடரிலேயே பதவி நீக்க தீர்மானம் தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது தொடர்பாக மாநிலங்களவை எம்.பி.யும், மூத்த வக்கீலுமான கபில்சிபல் கூறுகையில், இது போன்ற கருத்துகளை வெளியிடும் எந்த நீதிபதியும் தனது பதவியேற்பு உறுதிமொழியை மீறுகிறார். பதவிப்பிரமாணத்தை மீறுவோர் தனது பதவியில் இருக்க உரிமை இல்லை என்று தெரிவித்தார். உயர் நீதிமன்ற நீதிபதியை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றால், பாராளுமன்ற இரு அவைகளிலும் தீர்மானத்திற்கு பெரும்பான்மை ஆதரவு பெற வேண்டும். அதன் பிறகு ஜனாதிபதி உத்தரவின் பேரிலேயே பதவி நீக்க முடியும் என்று கூறினார்.

# 9 தமிழக மீனவர்கள் விடுதலை: இலங்கை நீதிமன்றம் உத்தரவு

**ராமேசுவரம், டிச. 13-**

தமிழக மீனவர்கள் 9 பேரை நிபந்தனையுடன் விடுதலை செய்தும், விசைப்படகு ஓட்டுநருக்கு ஒரு வருடம் சிறை தண்டனை விதித்தும், உயிரிழந்த கடற்படை வீரருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் இலங்கையின் மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜூன் 25-ம் தேதி இலங்கை கடற்படையினர் நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த ஆனந்தன் என்பவருக்குச் சொந்தமான விசைப் படகை கைப்பற்றி, படகிலிருந்த முத்து செட்டி (70), அவரது மகன்கள் மதி (38), ராஜேஷ் (35) மற்றும் வைத்தியநாதன் (45), வானவன்மாதேவியைச் சேர்ந்த கலைமுருகன் (25), கீச்சாங்குப்பத்தைச் சேர்ந்த கோவிந்தசாமி (60), கடலூரைச் சேர்ந்த மணி பாலன் (55), ஆந்திராவைச் சேர்ந்த கங்கால கொருமையா மற்றும் 2 மீனவர்கள் என மொத்தம் 10 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.

இந்த கைது நடவடிக்கையின் போது, இலங்கை ரோந்துப் படகிலிருந்த இலங்கை கடற்படை வீரர் ரத்நாயக்க, கைப்பற்றப்பட்ட மீனவர்களின் படகிலிருந்து தவறி விழுந்து, மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு செல்லும் போது உயிரிழந்தார். இலங்கை கடற்படை வீரர் உயிரிழந்தது தொடர்பாக கங்கேசன்துறை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், நேற்று (புதன்கிழமை) மீனவர்களின் காவல் முடிவடைந்ததை தொடர்ந்து மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, பத்து மீனவர்களில் 9 மீனவர்களை மீண்டும் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்தால் சிறை தண்டனை விதிக்கப்படும் என்ற நிபந்தனையுடன் விடுதலை செய்தும், விசைப்படகின் ஓட்டுநருக்கு ஒரு வருடம் சிறை தண்டனை விதித்தும், உயிரிழந்த கடற்படை வீரருக்கு இழப்பீடாக இலங்கை ரூ.35 லட்சம் (இந்திய மதிப்பில் ரூ.10 லட்சம்) வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார்.

### ஜம்மு- காஷ்மீருக்குள் ஊடுருவல்:

# பாகிஸ்தானை சேர்ந்தவர் கைது

**ஜம்மு, டிச. 13-**

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் பகுதில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகே பாகிஸ்தான் ஊடுருவல்காரர் ஒருவர் ராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளார். அதிகாரிகள் நேற்று (வியாழக்கிழமை) இதனை தெரிவித்தனர்.

புதன்கிழமை மாலை நூர்கோட் என்ற இந்திய எல்லையோர கிராமத்துக்குள் நுழைந்த முஹ்த் சாதிக் (18) என்ற நபரை பாதுகாப்பு படையினர் தடுத்து நிறுத்தி கைது செய்துள்ளனர். ஊடுருவ முயன்ற அந்த நபர் சந்தேகத்துக்கிடமான எந்தப் பொருளையும் எடுத்துவரவில்லை என்றும் அவர் இந்திய எல்லைக்கு வந்த நோக்கம் குறித்து விசாரணை நடந்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




சட்டப்பேரவைகள்தான் ஜனநாயகத்தின் நாற்றங்கால்கள். அங்கிருந்துதான் ஜனநாயகம் தழைக்க வேண்டும். ஆனால், நாற்றங்கால்களையே கருகச் செய்து ஜனநாயக த்தை வளர விடாமல் அழிக்கும் பணியைத்தான் தி.மு.க. அரசு செய்கிறது. அனைத்தையும் தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். சரியான நேரத்தில் பதில் தருவார்கள்.

**- ராமதாஸ்**




தமிழகத்தில் ஆற்றங்கரையோரம், தாழ்வான பகுதிகள் மற்றும் மலைப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, முறையான எச்சரிக்கைக்கு பின்னரே தமிழக அரசு அணைகளில் இருந்து நீர் திறந்துவிட வேண்டும். இது மாதிரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதே பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாக்க ஒரே வழி.

**- டி.டி.வி. தினகரன்**



மத்திய அரசின் கொள்கைகள் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதில் தோல்வியடைந்து விட்டது. அரசின் யுக்திகள் கார்ப்பரேட் நிறுவனங்களின் வரிகளைக் குறைத்து, சம்பளம் வாங்கும் மத்திய வர்க்கத்தினர் மீது வரியைச் சுமத்துவது முதலீடு மற்றும் பணியமர்த்தல் அதிகரிப்பு இல்லாமல், ஒரு பெரிய அளவிலான ஏகபோகத்தினை உருவாக்கியுள்ளது.

**- ஜெய்ராம் ரமேஷ்**



டங்ஸ்டன் சுரங்கத்தை எதிர்க்கும் முதல்வர்; நிலக்கரி சுரங்கத்தை எதிர்க்காதது ஏன்? கடலூர் மாவட்டத்தில் லட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்தைப் பறித்து, சுற்றுச்சூழலை சீரழிக்கும் என்எல்சி நிலக்கரி சுரங்கத்திற்கு எதிராக முதல்வர் மு.க.ஸ்டாலின் எதிர்ப்பை வெளிப்படுத்தாதது கடலூர் மக்களுக்கு அவர் இழைக்கும் துரோகம்.

**- அன்புமணி**


# சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளில் பெறப்பட்ட வாக்காளர் விண்ணப்பங்களின் உண்மைத்தன்மை

## கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் நேரில் ஆய்வு



**சென்னை,டிச.13**
மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளில், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் - 2025, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் தொடர்பாக சிறப்பு முகாமில் பெறப்பட்ட விண்ணப்பங்களை சரிபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர்களின் வசதிக்காக 01.01.2025 என்ற நாளை தகுதி நாளாகக் கொண்டு, சிறப்பு முகாம்களை நடத்திட அறிவுறுத்தியுள்ளது. இவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் கள விசாரணை செய்யப்பட்டது. கள விசாரணை செய்யப்பட்ட விண்ணப்பங்களை மேலாய்வு செய்திடும் பொருட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட எண்.21, அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அண்ணாநகர் டவர் பூங்கா பகுதியில் விண்ணப்பித்த வாக்காளர்களின் வீடுகளுக்கு கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) ம.பிரதிவிராஜ், (12.12.2024) நேரில் சென்று, வாக்காளர்களின் விண்ணப்பப் படிவத்தின் உண்மைநிலைகள் குறித்து கேட்டறிந்து சான்றுகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) சி.சுரேஷ் மற்றும் சம்பந்தப்பட்ட உடனிருந்தனர்.



வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மேயர் ஆர்.பிரியா சென்னை மாநகராட்சி அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்தார். உடன் தலைமை பொறியாளர் ராஜேந்திரன் உள்ளார்.

# மடிப்பாக்கம் ஏரியை மீட்டெடுக்க சென்னை மாநகராட்சி திட்டம்

**சென்னை டிச 13-**
தென்சென்னை பகுதியில் உள்ள முக்கிய ஏரிகளில் ஒன்றான மடிப்பாக்கம் ஏரி 62 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்த ஏரி கடந்த 2017-ம் ஆண்டு ஆக்கிரமிப்பின் பிடியில் இருந்தது.

மேலும் ஏரியில் குப்பைகள் கொட்டப்பட்டதால் ஏரியின் பரப்பளவும் குறைந்தது. இதையடுத்து பல்வேறு அமைப்புகளின் முயற்சியால் இந்த ஏரி மீட்டெடுக்கப்பட்டது.

இதையடுத்து மடிப்பாக்கம் ஏரியின் புனரமைப்பு பணிகளை கடந்த 2018-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி தொடங்கியது. ரூ.2 கோடி மதிப்பில் நடைபாதைகள், பெண்கள் உடற்பயிற்சி கூடம், திறந்தவெளி உடற்பயிற்சி கூடம், விளக்குகள் ஆகியவை அமைக்கப்பட்டன.

மேலும் சட்டமன்ற உறுப்பினர் நிதி ரூ.42 லட்சத்தில் வேலியுடன் கூடிய பாதை அமைக்கப்பட்டது. ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ரூ.1.5 கோடி மதிப்பில் 2 கி.மீ நீளத்துக்கு ஏரியை ஆழப்படுத்தி, அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஏரி மடிப்பாக்கம் அய்யப்பன் நகர், கார்த்தி கேயபுரம், ராம் நகர், சதாசிவம் நகர், ராஜாஜி நகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் 1 லட்சம் மக்களின் வாழ்வாதாரமாக உள்ளது. இதையடுத்து பொதுமக்கள் ஏரியின் கரையோரங்களில் 1,000 மரக்கன்றுகளை நட்டனர்.

இந்த நிலையில் தற்போது பிளாஸ்டிக் கழிவுப்பொருட்களை வீசி எறிவதாலும், களை செடிகள் அதிக அளவில் வளர்ந்திருப்பதாலும் மடிப்பாக்கம் ஏரி மீண்டும் மாசடைந்து வருகிறது. இதுகுறித்து அந்த பகுதியை சேர்ந்த சமூக ஆர்வலர்கள் கூறுகையில், 'மடிப்பாக்கம் பகுதியில் ஏற்படும் வெள்ளப்பெருக்கை தடுக்க மடிப்பாக்கம் ஏரி மட்டுமே முக்கிய ஆதாரமாக உள்ளது. இந்த ஏரியை பாதுகாக்க சென்னை மாநகராட்சி பல வசதிகளை செய்து கொடுத்தாலும், ஏரியை பராமரிக்க பாதுகாவலர்களும், தோட்டக்காரர்களும் இல்லை. எனவே சென்னை மாநகராட்சி மடிப்பாக்கம் ஏரியை பாதுகாத்து, சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்' என்று கூறியுள்ளனர்.

இதையடுத்து வெள்ள தடுப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக மடிப்பாக்கம் ஏரியை மீட்டெடுக்க சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. மேலும் ஏரியை சீரமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்கவும் சென்னை மாநகராட்சி முடிவு செய்துள்ளது



வளசரவாக்கம் மண்டலம் 151வது வார்டு மாமன்ற உறுப்பினர் ச.சங்கர்கணேஷ் தலைமையில் ஏரியா சபை கூட்டம் நடைபெற்றது.இதில் ஏரியா சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்களது பகுதியில் குறைகளை மனுவாக அளித்தனர்.

# சென்னையில் கனமழையால் 3 சுரங்கப்பாதைகள் மூடல்

**சென்னை டிச 13-**
கனமழை காரணமாக சென்னையில் 3 சுரங்கபாதைகள் மூடப்பட்டிருப்பதாக சென்னை மாநகராட்சி நிர்வாகம் அறிவித்துள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதியில் வங்கக்கடல் காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் கடந்த 1 மணி நேரமாக பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக சென்னையின் 3 சுரங்கபாதைகளில் மழை நீர் தேங்கி உள்ளது.பழவந்தாங்கல் சுரங்கப்பாதை, அரங்கநாதன் சுரங்கப்பாதை, கிண்டி கத்திபாராவிலிருந்து செல்ல கூடிய சுரங்கப்பாதை என 3 சுரங்கபாதைகளும் நிரம்பியுள்ளதால் போக்குவரத்து தற்போது துண்டிக்கப்பட்டுள்ளது. சுரங்கபாதைகளில் தேங்கி உள்ள தண்ணீரை மோட்டார் மூலம் அகற்றும் பணிகளில் மாநகராட்சி அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இப்பகுதியில் வரும் வாகனங்களை வேறு பகுதிக்கு மாற்றப்பட்டு வருகிறது.

# ஆன்லைன் முதலீட்டு மோசடியில் கேரளாவைச் சேர்ந்த சைபர் கிரைம் குற்றவாளி கைது

**சென்னை டிச 13-**
ஆன்லைன் முதலீட்டு மோசடியில் கேரளாவைச் சேர்ந்த சைபர் குற்றவாளி கைது செய்யப்பட்டுள்ளார். இது ஒரு ஆன்லைன் முதலீட்டு மோசடியாகும்.

சைபர் குற்றவாளிகள் ஆன்லைனில் முதலீடு செய்தால் அதிக லாபம் சம்பாதிக்கலாம் என பொதுமக்களிடம் நம்பவைத்து ஏமாற்றுகிறார்கள். கடந்த 28.06.2024ம் தேதி 35 வயதுகுட்பட்ட மதுரையை சேர்ந்த ஆசிரியர் ஒருவர் பேஸ்புக் மூலம் ஆன்லைன் முதலீடு செய்து அதிக பணம் சம்பாதிக்கலாம் என வந்த விளம்பரத்தை நம்பி பணம் ரூ.52,66,417/- ஐ இழந்துள்ளதாக புகார் அளித்துள்ளார். மேற்கண்ட விளம்பரத்தை நம்பி அவர் சைபர் குற்றவாளிகள் அனுப்பிய பல்வேறு வங்கி கணக்குகளுக்கு பணத்தை அனுப்பியுள்ளார்.இறுதியில் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அவர் தான் இழந்த பணத்தை மீட்டுத்தருமாறு கொடுத்த புகாரின் பேரில் மதுரை மாவட்ட சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் ஒன்றை பதிவு செய்தார்.

இதுதொடர்பாக, மதுரை மாவட்ட சைபர் கிரைம் காவல் நிலையத்தில் குற்ற எண். 21/2024, U/s 420 IPC and 66(D) of ITA Act 2008 வழக்கு பதிவு செய்யப்பட்டு தனிப்படை அமைக்கப்பட்டு, மனுதாரர் எதிரிகளுக்கு பணம் அனுப்பிய பல்வேறு வங்கி கணக்குகளில நடைபெற்ற முறைகேடான பண பரிவர்த்தனைகளை விசாரணை செய்தனர்.

மேற்படி குற்றச்சம்பவம் தொடர்பாக 11.12.2024-ம் தேதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள "Zerv" என்ற ஸ்கிராப் நிறுவனத்தின் பெயரில் வங்கிக் கணக்கைத் திறந்த எதிரி அன்வர்ஷா, என்பவரை தனிப்படையினர் கைது செய்து அவரிடமிருந்து குற்றச்செயலுக்கு பயன்படுத்திய செல்போன்கள், சிம்கார்டுகள், வங்கி கணக்கு புத்தகங்கள் ஏ.டி.எம்.கார்டுகள், பாஸ்போர்ட் ஆகியவற்றை கைப்பற்றி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தனர். மேற்கண்ட எதிரி சைபர் கிரைம் மூலம் பொதுமக்களை பல வங்கி கணக்குகளை பயன்படுத்தி ஏமாற்றி இருப்பது விசாரணையில் தொியவந்துள்ளது. இது பற்றி மேலும் விசாரணை நடந்து வருகிறது.பொதுமக்களுக்கான அறிவுரைகள்: இதுபோன்ற கவர்ச்சிகரமான விளம்பரங்களை நம்பாதீர்கள்.

# சென்னை தரமணி பகுதியில் கல்லூரி மாணவருக்கு கத்திகுத்து: ஒருவர் கைது

**சென்னை டிச 13-**
சென்னை, கந்தன்சாவடி, அண்ணா நெடுஞ்சாலையில் வசித்து வரும் தஸ்லீம் ஷரிப், என்பவர் பல்லாவரம் பகுதியிலுள்ள தனியார் கல்லூரியில் 2ம் ஆண்டு படித்து வருகிறார். தஸ்லீம் ஷரிப் கடந்த 9 ந் தேதி அன்று மாலை, கந்தன் சாவடி, பிள்ளையார் கோயில் தெருவிலுள்ள மளிகை கடையில் நின்றிருந்தபோது, அப்பொழுது அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த அப்பகுதியைச் சேர்ந்த தெரிந்த நபரான சரத்குமார் என்பவர தஸ்லீமை தனது இருசக்கர வாகனத்தில் ஏறச் சொல்லி, இருசக்கர வாகனத்தில் ஏற்றிக் கொண்டு, கந்தன்சாவடியிலுள்ள தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளார். பின்னர் சரத்குமார் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து தஸ்லீமின் கையில் வெட்டி, கத்தியை திருப்பி பிடித்து மீண்டும் தஸ்லீமை தாக்கியபோது, தஸ்லீம் சத்தம்போடவே, பொதுமக்கள் வருவதை கண்டு, சரத்குமார் அவரது இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றார். இரத்தக்காயமடைந்த தஸ்லீம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் மேற்படி சம்பவம் குறித்து, தரமணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.தரமணி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட சரத்குமார், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி மற்றும் இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் எதிரி சரத்குமார் மீது ஏற்கனவே 1 கஞ்சா வழக்கு உட்பட 2 குற்ற வழக்குகள் உள்ளது தெரியந்தது. கைது செய்யப்பட்ட எதிரி சரத்குமார் விசாரணைக்குப் சிறையில் அடைக்கப்பட்டார்.

# பைக் மீது டெம்போ மோதி சினிமா ஸ்டூடியோ ஊழியர் பலி

**சென்னை டிச.13-**
அம்பத்தூர் அடுத்த புத்தகரம் பகுதியைச் சேர்ந்தவர் அருண்குமார் (31), சினிமா ஸ்டூடியோ ஊழியர். நேற்று காலை வேலைக்கு வீட்டில் இருந்து இருசக்கர வாகனத்தில் புறப்பட்டார். கொரட்டூர் வாட்டர் கெனால் சாலையில் எதிரே வந்த டெம்போ டிராவலர் வாகனம் இவர் மீது வேகமாக மோதியதில் தூக்கி வீடப்பட்டு அதே இடத்தில் உயிரிழந்தார். செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் டெம்போ டிராவலர் வாகன டிரைவர் ரமேஷ் (44) என்பவரை கைது செய்தனர்.

# சிந்தாதிரிப்பேட்டை நாகேஸ்வரி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ.30 லட்சம் மதிப்பிலான வணிக மனை மீட்பு

**சென்னை டிச 13-**
சிந்தாதிரிப்பேட்டை அருள்மிகு நாகேஸ்வரி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ.30 லட்சம் மதிப்பிலான வணிக மனை மீட்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின் படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் நேற்று சென்னை, சிந்தாதிரிப்பேட்டை அருள்மிகு நாகேஸ்வரி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ.30 லட்சம் மதிப்பிலான வணிக மனை மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.சென்னை, சிந்தாதிரிப்பேட்டை அருள்மிகு நாகேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் பொது நல நிதியின் மூலம் புனரமைப்பு மேற்கொள்ளும் வகையில் திருப்பணிகள் தொடங்க உள்ளதால் நேற்று திருக்கோயிலுக்கு அருகில் உள்ள ஆக்கிரமிப்பு தாரர்களை அகற்றிடும் வகையில் உஸ்மான்கான் தெருவில் 520 சதுரடி கொண்ட வணிக மனையில் அமைந்துள்ள கட்டிடம் சென்னை-2 உதவி ஆணையர் பாரதிராஜா முன்னிலையில் திருக்கோயில் வசம் சுவாதீனம் எடுக்கப்பட்டது. இந்த சொத்தின் தற்போதைய மதிப்பு ரூ.30 லட்சம் ஆகும். இந்த நிகழ்வின் போது திருக்கோயில் செயல் அலுவலர் ரமேஷ், ஆய்வாளர் மணி மற்றும் பணியாளர்கள் உடன் இருந்தனர்.

# வழக்கறிஞருக்கு அரிவாள் வெட்டு:ஒருவர் கைது

**சென்னை டிச 13-**
சென்னை, கோட்டூர், பாரதி அவென்யூ முதல் தெருவில் வசித்து வரும் மதன்குமார், என்பவர் கடந்த 9 ந் தேதி அன்று மாலை, கோட்டூர், மண்டப சாலையில் நின்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த அஜித்குமார் என்பவர் அருண் எங்கே என்று கேட்டுள்ளார், மதன்குமார் தனக்கு தெரியாது என்று கூறிவிட்டு, அங்கிருந்து செல்ல முற்பட்டபோது, அஜித்குமார், மேற்படி மதன்குமாரிடம் தகாத வார்த்தைகள் பேசி, வீண் தகராறு செய்து அவரை அரிவாளால் தாக்கிவிட்டு, தப்பிச் சென்றுள்ளார். இதில் இரத்தகாயமடைந்த மதன்குமார் இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து கோட்டூர்புரம் போலீசார் தீவிர விசாரணை செய்து, அஜித்குமார், என்பவரை கைது செய்தனர். அவர் மீது உட்பட 3 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# போதைப்பொருள் வைத்திருந்த வட மாநில வாலிபர் கைது

**சென்னை டிச 13-**
சென்னை பெருநகர காவல், அடையாறு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தனிப்படை காவல் குழுவினர் நேற்று முன் தினம் காலை அடையாறு காந்தி நகர் பேருந்து டிப்போ பின்புறமுள்ள 1வது மெயின் ரோட்டில் கண்காணித்து, அங்கு ஹெராயின் என்ற போதைப்பொருள் வைத்திருந்த அனருல் இஸ்லாம், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 65 பிளாஸ்டிக் குப்பிகளில் மொத்தம் 6 கிராம் எடை கொண்ட ஹெராயின் என்ற போதைப்பொருள் மற்றும் 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி அனருல் இஸ்லாம், விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# வேகமாக நிரம்பும் செம்பரம்பாக்கம், புழல் ஏரிகள்

**சென்னை டிச 13-**
தென் மேற்கு, அதனை ஒட்டிய தென் கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவி வந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக இலங்கை கடலோரப் பகுதிகளை ஒட்டிய தென் மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலைகொண்டு இருக்கிறது.

இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று இலங்கை-தமிழக கடலோரப் பகுதிகளை அடையும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் நேற்று முன் தினம் முதல் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. நேற்று இரவு முதல் பெய்து வரும் கன மழை காரணமாக செம்பரம் பாக்கம் ஏரி விரைந்து நிரம்பி வருகிறது. கனமழை காரணமாக செம்பரம்பாக்கம் ஏரிக்கான நீர்வரத்து 713 கனஅடியாக உள்ள நிலையில் 80 சதவீதம் நிரம்பியது.

கனமழை காரணமாக புழல் ஏரி வேகமாக நிரம்பி வரும் நிலையில் விரைவில் முழு நீர்மட்டத்தை எட்டுவதற்கு வாய்ப்பு உள்ளது. 21 அடி உயரம் கொண்ட புழல் ஏரியில் நீர்மட்டம் 18.80 அடியாக உள்ள நிலையில் தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்துள்ளது.

புழல் ஏரிக்கான நீர்வரத்து 629 கனஅடியாக உள்ள நிலையில் ஏரியின் பாதுகாப்பு நலன் கருதி அப்படியே வெளியேற்றப்படுகிறது. புழல் ஏரியின் மொத்த கொள்ளளவான 3,300 மில்லியன் கனஅடியில் தற்போதைய நீர் இருப்பு 2,771 மில்லியன் கன அடியாக உள்ளது.

# ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் நோயாளிகள் செலுத்திய பணம் மோசடி: 2 அலுவலர்கள் கைது

**சென்னை டிச 13-**
சென்னை, இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில், குறிப்பிட்ட நோயாளிகள் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ தொகையை மருத்துவமனையில் செலுத்திவிட்டு சென்றதாகவும், இந்த தொகையை மருத்துவமனை அலுவலர்கள் சிலர் மோசடி கணக்கெழுதி பணத்தை அபகரித்துள்ளதாகவும், மோசடி செய்த அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி, இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையின் முதல்வர் இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணை செய்ததில், இம்மருத்துவமனையில் குறிப்பிட்ட சில மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் சிகிச்சை முடிந்து செல்லும்போது, பணம் செலுத்த வேண்டியுள்ள நிலையில், இந்த பிரிவில் உள்ள குபேரன் மற்றும் கலைமகள் ஆகிய அலுவலர்கள், நோயாளிகள் செலுத்தும் பணத்திற்கு உரிய ரசீது வழங்கியும், மருத்துவமனை பதிவேட்டில் குறைவான தொகையை குறிப்பிட்டும், மீதம் பணத்தை கையாடல் செய்துள்ளது தெரியவந்தது. அதன்பேரில், மேற்படி மோசடியில் ஈடுபட்ட இம்மருத்துவமனை அலுவலர்கள் 1.குபேரன், 2.கலைமகள், ஆகிய இருவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இருவரும், விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# கோவை மாவட்டம், ஆனைமலைமாசாணியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு அமைச்சர்கள் வி.செந்தில் பாலாஜி, பி.கே.சேகர்பாபு பங்கேற்று தரிசனம்

**சென்னை,டிச.13**
கோவை மாவட்டம், ஆனைமலை அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயிலில் (12.12.2024) நடைபெற்ற திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழாவில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்.பி.கே.சேகர்பாபு, பேரூர் ஆதீனம், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் இறையன்பர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

**குட முழுக்கு**

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், ஆகம விதிகளின்படி குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவுற்றபின், திருப்பணிகள் மேற்கொள்ளப்படாத திருக்கோயில்களை கண்டறிந்து குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

கோவை மாவட்டம், ஆனைமலை, அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயிலானது புகழ்பெற்ற திருக்கோயில்களில் ஒன்றாகும். இத்திருக்கோயிலில் அருள்மிகு மாசாணியம்மன் மயானதேவதையாக 17 அடி நீளத்தில் சயன கோலத்தில் அருள்பாலித்து வருகிறார். இத்திருக்கோயிலுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கடந்த 12.12.2010 அன்று குடமுழுக்கு நடைபெற்றது. இத்திருக்கோயிலுக்கு மீண்டும் குடமுழுக்கு நடத்திடும் வகையில் ரூ.20.28 கோடி செலவில் 32 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனைத் தொடர்ந்து (12.12.2024) அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயிலுக்கு வேத மந்திரங்கள் முழங்க, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்பி.கே.சேகர்பாபு, தவத்திரு பேரூர் ஆதீனம், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் இறையன்பர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்புடன் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழா வெகுவிமரிசையாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமை



யிலான அரசு பொறுப்பேற்றபின், இன்று வரை 2,357 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளன.

இத்திருக்கோயில் வளாகத்தில் கடந்த டிசம்பர் 9 ஆம் தேதி யாகசாலை பூஜையுடன் தொடங்கிய விழாவில் கடந்த இரண்டு நாட்களாக யாக பூஜையில் சிவாச்சாரியார்கள் வேள்வி பூஜை, திருமுறை பாராயணம் செய்தனர். அதனைத் தொடர்ந்து இன்று நான்கு கால யாகசாலையில் பூஜிக்கப்பட்ட தீர்த்தக் குடங்களை சிவாச்சாரியார்கள் மேள, தாளங்கள் முழங்க விமானம் மற்றும் இராஜகோபுரங்களுக்கு கொண்டு சென்று இறையன்பர்களின் ஆராவாரத்துடன் கோபுர கலசங்களுக்கு புனித நீரை ஊற்றி திருக்குடமுழுக்கை நடத்தி வைத்தனர்.

**கலந்து கொண்டோர்**

இந்நிகழ்ச்சியில் பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. திரு. கே. ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், கோவை மாவட்ட ஆட்சியர். கிராந்தி குமார் பாடி,பொள்ளாச்சி சார் ஆட்சியர் ஏ.கேத்ரின் சரண்யா, கோவை மண்டல இணை ஆணையர். பி,இரமேஷ், உதவி ஆணையர் திரு. கைலா சமூர்த்தி, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் முரளி கிருஷ்ணா, மற்றும் அறங்காவலர்கள், செயல் அலுவலர்/உதவி ஆணையர் இந்திரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரி அரசு சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை, தொண்டு நிறுவனத்திற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

## முதல்வர் ரங்கசாமி முன்னிலையில் கையெழுத்து



**புதுச்சேரி,டிச. 13,**

முதலமைச்சர் ந. ரங்கசாமி முன்னிலையில், புதுச்சேரி அரசு சுகாதாரம் மற்றும் குடும்ப நலவழித்துறை மற்றும் அலர்ட் என்னும் தொண்டு நிறுவனத்திற்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

**ஒப்பந்தம்**

இந்த ஒப்பந்தத்தில், சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் ரவிச்சந்திரன் மற்றும் தொண்டு நிறுவனத்தின் நிர்வாக அறங்காவலர் ராஜேஷ் திரிவேதி ஆகியோர் கையெழுத்திட்டனர்.

அவசர முதலுதவி சேவைகள் மற்றும் விபத்து ஏற்பட்டால், விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவைப்படும் அவசர முதலுதவிகளை அளிக்க தன்னார்வலர்களை தயார்ப்படுத்த, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு தன்னார்வலரை தேர்ந்தெடுத்து பயிற்சி அளித்து, அவர்களை தகுந்த நேரத்தில் பயன்படுத்துவது இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் ஆகும்.

மேலும், இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் புதுச்சேரி மாநிலத்தைச் சார்ந்த மக்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்காக அவசர மருத்துவ சேவைகளின் தரம் மற்றும் செயல்திறன் மேம்படுத்தப்படும். இது தவிர, இந்த தொண்டு நிறுவனமானது, பொது சுகாதாரம் தொடர்பான பிரச்சாரங்கள் மற்றும் அவசரகால தயார்நிலை மற்றும் பதிலளிப்பு நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஒத்துழைப்பை நல்கும்.

சட்டப்பேரவைத் தலைவர் செல்வம், சுகாதாரத்துறை துணை இயக்குநர் டாக்டர் ரகுநாதன், அலர்ட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரி தலைவர் முரளிதரன், அலர்ட் நிறுவனத்தின் நிறுவனர்-அறங்காவலர் கலா பாலசுந்தரம் மற்றும் பலர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



**புதுச்சேரி ஸ்மார்ட் சிட்டி மற்றும் தென்னக ரயில்வே இணைந்து நான்கு வழி மேம்பாலம் கட்ட முதல்வர் ரங்கசாமி தலைமையில் பூமி பூஜை நடைபெற்றது. அருகில் அமைச்சர் லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பத், அணி பால் கென்னடி, நேரு, தென்னக ரயில்வே தலைமை பொறியாளர் ரவிக்குமார், துணை தலைமை பொறியாளர் வினோத் குமார் உட்பட அதிகாரிகள் உள்ளனர்.**

# விழுப்புரம் மாவட்டத்தில் தொடர் கனமழை: கிராமப்பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

## கலெக்டர் சி.பழனி தகவல்

**விழுப்புரம்,டிச. 13,**

விழுப்புரம் மாவட்டத்தில் தொடர் கனமழை பெய்து வருவதால் திண்டிவனம் வட்டம் வைரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள 122 நபர்களுக்கும் கண்டாச்சிபுரம் வட்டம் அரகண்டநல்லூர் ஜே.சி மகாலில் தங்க வைக்கப்பட்டுள்ள 80 நபர்களுக்கும் செஞ்சி வட்டம் மேல்ஒலக்கூரில் அமைக்கப்பட்டுள்ள முகாமில் 35 நபர்களுக்கும் அஞ்சான்சேரி பொன்பத்தி ஆகிய பகுதியில் உள்ள முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 49 நபர்களுக்கும் மாவட்டம்பாடி பகுதியில் உள்ள முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 27 நபர்களுக்கும் மேல்மலையனூர் வட்டம் கோட்டம்பூண்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள 25 நபர்களுக்கும் அவலூர்பேட்டை அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள 22 நபர்களுக்கும் ஆதிப்பட்டு பகுதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 7 நபர்களுக்கும் கீரன்தாம்பட்டு அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள 14 நபர்களுக்கும் மேல்மலையனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள 30 நபர்கள் என மொத்தம் 10 முகாம்களில் 109 குடும்பங்களைச் சேர்ந்த நபர்களுக்கு 313 நபர்களுக்கு காலை உணவும் 411 நபர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் சமுதாய உணவுக்கூடங்கள் மூலம் நகராட்சி மற்றும் வருவாய்த்துறை சார்பில் உணவு பொட்டலங்கள் தயார் செய்யப்பட்டு விழுப்புரம் வட்டத்திற்குட்பட்ட கீழ்ப்பெரும்பாக்கம் பகுதியில் உள்ள 80 நபர்களுக்கு மதிய உணவு என மொத்தம் 804 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து தொடர் கனமழை பெய்துவருவதையொட்டி சாத்தனூர் அணையிலிருந்து நீர் வெளியேற்றப்படுவதால் விழுப்புரம் கண்டாச்சிபுரம் திருவெண்ணெய்நல்லூர் ஆகிய தென்பெண்ணை ஆற்றின் கரையோர பகுதியில் வசிக்கும் 35 கிராம பொதுமக்களுக்கு முன்னறிவிப்பாக ஒலிப்பெருக்கி பொருந்திய ஆட்டோ மூலம் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

தொடர் கனமழை பெய்துவருவதையொட்டி வீடூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவுள்ளது தொடர்பாக வானூர் விக்கிரவாண்டி மற்றும் திண்டிவனம் ஆகிய ஆற்றின் கரையோர பகுதியில் வசிக்கும் 15 கிராம பொதுமக்களுக்கு முன்னறிவிப்பாக ஒலிப்பெருக்கி பொருந்திய ஆட்டோ மூலம் தகவல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அதிக மழைப்பொழிவு உள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கிடவும் தங்களுடைய உடைமைகள் மற்றும் கால்நடைகளை பாதுகாப்பான இடத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என கலெக்டர் டாக்டர் சி.பழனி தெரிவித்தார்.

### மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில்

# 64 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.20.21 லட்சம் மதிப்பீட்டில் உதவி உபகரணங்கள்

## கலெக்டர் சி.பழனி வழங்கினார்



**விழுப்புரம்,டிச. 13,**

விழுப்புரம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களை கலெக்டர் டாக்டர் சி.பழனி வழங்கினார்.

கலெக்டர் தெரிவிக்கையில் தமிழ்நாடு முதலமைச்சர் மாற்றுத்திறனாளிகளும் சமூகத்தில் ஓர் அங்கமாகவும் சம உரிமை பெற்று திகழ்ந்திட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தியும் மாதாந்திர உதவித்தொகை மற்றும் கல்வி உதவித்தொகையினை உயர்த்தி வழங்கி வருகிறார்கள். அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றைய தினம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் தலா ரூ.96 011 வீதம் 5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.4 80 055 மதிப்பீட்டில் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும் தலா ரூ.25 000 வீதம் 16 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.4 00 000 மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகள் சுய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் வங்கிக் கடனுதவிகளும் தலா ரூ.6 840 வீதம் 15 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1 02 600 மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களும் தலா ரூ.7 900 வீதம் 10 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.79 000 மதிப்பீட்டில் மூளை முடக்குவாத பயனாளிகளுக்கான சிறப்பு சக்கர நாற்காலியும் 10 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1 12 000 மதிப்பீட்டில் கல்வி உதவித்தொகையும் தலா ரூ.1 06 000 மதிப்பீட்டில் 8 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.8 48 000 மதிப்பீட்டில் மின் கலனால் இயங்கும் சக்கர நாற்காலி என மொத்தம் 64 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.20 21 655 மதிப்பீட்டில் வழங்கப்பட்டது. எனவே மாற்றுத்திறனாளிகள் அனைவரும் உதவி உபகரணங்களை நல்ல முறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தினை மேம் ப டுத் திக் கொள்ள வேண்டும் என கலெக்டர் டாக்டர் சி.பழனி தெரிவித்தார். இந்நிகழ்வில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சுப்பிரமணி செயல் திறன் உதவியாளர் முருகன் பல்நோக்கு உதவியாளர் நெல்சன் பேச்சுப்பயிற்சியாளர் அபிஷேகா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### பண்ருட்டி, அண்ணாகிராமம், பரங்கிபேட்டை பகுதிகளில் உள்ள

# அரசுப்பள்ளி மாணவர்கள் பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெறுவது குறித்து ஆசிரியர்களுடன் கலந்தாய்வு

## கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடந்தது



**கடலூர்,டிச. 13,**

கடலூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் அரசுப்பள்ளி மாணவர்கள் பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெறுவது குறித்து பண்ருட்டி, அண்ணாகிராமம், பரங்கிபேட்டை ஆகிய வட்டார அளவிலான ஆசிரியர்களுடன் கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் கலந்தாய்வு மேற்கொண்டார். கலெக்டர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மாணவர்களின் நலனை கருத்தில்கொண்டு பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி உயர்தரமான கல்வியினை பயில வேண்டும் என்பதற்காகவும், மாணாக்கர்கள் கல்வி கற்பதற்கான சிறந்த சூழ்நிலைகளை ஏற்படுத்தி தரவேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தியுள்ளார்கள்.

கடலூர் மாவட்டத்தில் 293 அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 66,855 மாணவர்கள் 70,642 மாணவிகள் என மொத்தம் 1,37,497 மாணவ,மாணவிகள் 10ஆவது, 11ஆவது மற்றும் 12ஆம் வகுப்புகளில் கல்வி பயின்றுவருகின்றனர். பண்ருட்டி, அண்ணாகிராமம், பரங்கிபேட்டை ஆகிய வட்டாரங்களில் 61 பள்ளிகளில் 14,662 மாணவர்கள், 17,157 மாணவிகளும் என மொத்தம் 31,818 மாணவ,மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளிகளில் பயிற்றுவிக்கும் 95 ஆசிரியர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர். அரசு பொதுத்தேர்வு என்பது மாணவர்களின் கல்வியின் தரத்தினை பரிசோதிக்கவும் மற்றும் மேம்படுத்துவதற்கான தேர்வு ஆகும். இதனை மாணவர்கள் எவ்வித தயக்கமுமின்றி முழுத்திறனுடன் எதிர்கொள்வதற்கு ஆசிரியர்களின் பங்கு அளப்பறியதாகும். மாணவர்களின் திறனை கண்டறிந்து முன்னேற்ற பாதையில் அழைத்துச்செல்வது முக்கிய பொறுப்பாகும்.

மாணாக்கர்கள் தேர்ச்சி விகிதம் அதிகரித்திட பின் தங்கிய மாணவர்களுக்கு கூடுதல் பயிற்சி வகுப்பு, மாணாக்கர்களின் உடல்நலன் குறித்து அறிந்து பயிற்றுவித்தல், மாணாக்கர்களின் குடும்ப சூழ்நிலையறிந்து பயில்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி தருதல் வேண்டும். மாணவர்களுக்கு ஊக்கப்பயிற்சி அளித்து தன் முனைப்புடன் கல்வி பயில நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தொடர்ச்சியாக அவர்களுக்கு மீளாய்வுக்கூட்டம் நடத்தி அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்திட வேண்டும்.

அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த கல்வியினை வழங்கிட தமிழக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக செயலாற்றிட வேண்டும் என கலெக்டர் தெரிவித்தார்.

இக் கூட் டத் தில் முதன்மை கல்வி அலுவலர் எல்லப்பன், விருத்தாசலம் மாவட்ட கல்வி அலுவலர் துரைப்பாண்டி, கடலூர் மாவட்ட கல்வி அலுவலர் ஞானசேகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**புதுச்சேரி மாநில ரஜினிகாந்த் தலைமை ரசிகர் நற்பணி மன்றம் சார்பில் மணக்குல விநாயகர் கோவிலில் சிறப்பு வழிபாடு செய்யப்பட்டு தங்கத்தேர் இழுக்கும் நிகழ்ச்சி மாநில செயலாளர் பிரபாகர் தலைமையில் நடைபெற்றது. அருகில் நிர்வாகிகள் குமார், கோபி, காமராஜ், ரமேஷ், ராமச்சந்திரன், தாரகை ராஜா, ஆட்டுப்பட்டி பாஸ்கர், ஜீவ தேவன், வழக்கறிஞர் வீரபத்திரன் கலந்து கொண்டு தங்கத்தேர் இழுத்தனர்.**

### விருத்தாசலம், பண்ருட்டி பகுதிகளில்

# உள்ளூர் திட்டக்குழுமம் மூலம் முழுமைத்திட்டம் தயாரித்தல் தொடர்பாக ஆலோசனைக்கூட்டம்

## கலெக்டர் தலைமையில் நடந்தது



**கடலூர்,டிச. 13,**

கடலூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விருத்தாசலம் மற்றும் பண்ருட்டி பகுதிகளில் உள்ளூர் திட்டக்குழுமம் மூலம் முழுமைத் திட்டம் தயாரித்தல் தொடர்பாக பங்களிப்பாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் , தலைமையில் நடைபெற்றது. ஆய்விற்கு பின் கலெக்டர் தெரிவிக்கையில்,

விருத்தாசலம் மற்றும் பண்ருட்டி பகுதிகளில் எதிர் வரும் 20 ஆண்டுக்கான எதிர்கால வளர்ச்சி திட்டத்தினை கணக்கில்கொண்டு, 2045ஆம் ஆண்டின் நகர்ப்புறம் அமைப்பு ஏற்படுத்துவது குறித்து முழுமையான திட்டம் மேற்கொள்ளுதல் தொடர்பாக ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

முழுத்திட்டமானது நிலத்தின் பயன்பாடு, உட்கட்டமைப்பு வசதிகள், போக்குவரத்து வசதிகள், அரசு அலுவலக கட்டடம், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள், சாலைகள், மின்சாதனப் பொருட்கள் போன்றவை எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்தத திட்டமிடுதலாகும். இது தொடர்பாக அனைத்து அரசுத்துறைகளிடமிருந்தும் துறை சார்ந்த கருத்துருக்கள் பெற்று இத்திட்டம் தயாரிக்கப்படும். அதன் பின்னர் அரசுக்கு அனுப்பி அனுமதிப்பெற்ற பின்னர் பொது மக்களின் கருத்துக்கேட்புக் கூட்டம் நடைபெறும் என கலெக்டர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட, நகர, ஊரமைப்பு உதவி இயக்குநர் பிரபாகரன், மேற்பார்வையாளர் விஜயலட்சுமி, வரைவாளர்கள், அளவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் மணிலா நகர் அரிமா சங்கத் தலைவர் ராஜா தலைமையில் வட்டாரத் தலைவர் செந்தில்குமார், மற்றும் விருந்தோம்பல் மாவட்ட தலைவர் பாபு முன்னிலையில் திருவண்ணாமலையில் நடைபெற உள்ள கார்த்திகை தீப விழாவை முன்னிட்டு 5000 லட்டுகள் தயார் செய்து திருவண்ணாமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த சேவை நிகழ்ச்சியில் வாகனத்தை மணிலா நகர் அரிமா சங்க நிர்வாகிகள் கொடி அசைத்து அனுப்பி வைத்தனர்.**



**விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் அருகே எரளூர் கிராமத்தில் பெஞ்சல் புயலால்பாதிக்கப்பட்டமக்களுக்குதிமுகமேற்குஒன்றியசெயலாளர்பி.வி.ஆர்.சு.விசுவநாதன் ஏற்பாட்டில் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் பொன்.கவுதம சிகாமணி அரிசி, மளிகை பொருட்கள் உள்ளிட்ட நிவாரண உதவிகளை வழங்கினார்.**

# கொட்டகுளம் கிராமத்தில் சிறுதானிய பயிர் மேலாண்மை பயிற்சி



**செங்கம் டிச.13**

செங்கம் தாலுக்கா புதுப்பாளையம் ஒன்றியம் கொட்டகுளம் கிராமத்தில் சிறுதானியங்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணை பள்ளி பயிற்சி வேளாண்மை துறை மூலம் நடந்தது.

வேளாண்மை உதவி இயக்குனர் நடராஜன் தலைமை தாங்கி கேழ்வரகு போன்ற சிறு தானிய பயிர்கள் அறுவடைக்கு பின் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் உரங்கள் உள்ளிட்ட பொருட்கள் கருவிகள் பணமில்லா பரிமாற்றம் போன்றவற்றை விளக்கி பேசினார். வேளாண்மை அலுவலர் சவுந்தர் விதை பண்ணை அமைத்தல் அதன் நன்மைகள் பயிர் பாதுகாப்பு பற்றி பேசினார்.

ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் சந்திரமோகன் உதவி வேளாண் வணிக அலுவலர் காமராஜ் கிராம அலுவலர் சரவணன் வட்டார தொழில் நுட்ப மேலாளர் கோகிலா உதவி மேலாளர்கள் விஷ்ணு முத்து ஆகியோர் சிறு தானிய பயிற்சிகள் தொழில்நுட்பம் சந்தைப்படுத்துதல் வெள்ள சேத கணக்கெடுப்பு வயல் தேர்வு போன்ற பல விழிப்புணர்வுகளை விளக்கி பேசினர்.

கூட்டத்தில் வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

# கோசாலை கிராமத்தில் காரிய மேடை திறப்பு விழா

**திருவண்ணாமலை டிச.13**

திருவண்ணாமலை அடுத்த கோசாலை கிராமத்தில் முனீஸ்வரன் கோயில் பின்புறம் விநாயகமூர்த்தி நாயக்கரின் நான்காம் ஆண்டு நினைவு தினம் முன்னிட்டு அவரது மகன்கள் வெங்கடேசன் சிதம்பரம் ராஜேந்திரன் ஆகியோர் 3 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டிய காரிய மேடை திறப்பு விழா செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டது சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் பி.கே.தனஞ்செயன் காரியமேடையை திறந்து வைத்தார். காரியமேடை கட்டிட சாவி ஊர் பிரமுகர் அர்ஜுனன் பூசாரி குமார் ஆகியோரிடம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only




**ராணிப்பேட்டை மாவட்டம், ஏகாம்பரநல்லூர் கிராமம். எல்ஆர் ஸ்கடர் உயர்நிலை பள்ளி விளையாட்டு திடலில் நடைபெற்ற சிறப்பு மனுநீதி நாள் முகாமில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.**

## ஒரே ஆண்டில் 4 சதங்கள்:
# மந்தனா புதிய சாதனை



பெர்த், டிச. 13-

ஒரு ஆண்டில் 4 சதங்கள் அடித்த முதல் வீராங்கனை என்ற சாதனையை இந்திய வீராங்கனை மந்தனா படைத்துள்ளார்.

**சுற்றுப்பயணம்...**

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இதில் 3 போட்டிகளிலும் தோல்வியடைந்த இந்திய அணி ஒயிட் வாஷ் ஆனது. இந்த தொடரின் 3-வது மற்றும் கடைசி போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் பீல்டிங்கை தேர்வு செய்தார். இதையடுத்து முதலில் பேட் செய்த ஆஸ்திரேலிய அணி 50 ஓவர் முடிவில் 6 விக்கெட் டுகளை இழந்து 298 ரன்கள் சேர்த்தது. அதிகபட்சமாக சதர்லேண்ட் 110 ரன்கள் குவித்தார். இந்திய தரப்பில் அருந்ததி ரெட்டி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

**மந்தனா சதம்...**

பின்னர் 299 ரன் இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி 45.1 ஓவர்களில் 215 ரன்களில் ஆல்-அவுட் ஆனது. இதனால் ஆஸ்திரேலியா 83 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்திய தரப்பில் அதிகபட்சமாக மந்தனா சதம் அடித்து அசத்தினார். ஆஸ்திரேலிய தரப்பில் ஆஷ்லி கார்ட்னெர் 5 விக்கெட்டுகளும், மேகன் ஸ்கட், அலனா கிங் தலா 2 விக்கெட்டுகளும், சதர்லேண்ட் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். ஆட்ட நாயகி மற்றும் தொடர்நாயகி விருதை சதர்லேண்ட் தட்டிச் சென்றார்.

**முதல் வீராங்கனை...**

இந்திய அணியின் முன்னணி வீராங்கனையான மந்தனா இந்த வருடம் மட்டும் ஒருநாள் கிரிக்கெட்டில் 4 சதங்கள் அடித்துள்ளார். இதன் மூலம் மகளிர் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு ஆண்டில் 4 சதங்கள் அடித்த முதல் வீராங்கனை என்ற மாபெரும் உலக சாதனையை அவர் படைத்துள்ளார். மந்தனா இந்த வருடம் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக 2, நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தலா 1 என மொத்தம் 4 சதங்கள் அடித்துள்ளார்.

## மாநிலங்களையே ஒழிக்கத்தான்
# ஒரே நாடு-ஒரே தேர்தல் திட்டம்
## துணை முதல்வர் உதயநிதி எதிர்ப்பு

சென்னை, டிச. 13-

மாநிலங்களையே ஒழிக்கத்தான் ஒரே நாடு-ஒரே தேர்தல் திட்டம் என்று எதிர்ப்பு தெரிவித்துள்ள, துணை முதல்வர் உதயநிதி, முதல்வர் ஸ்டாலின் தலைமையில் வலிமையுடன் எதிர்ப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' மசோதாவுக்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்துள்ளது. நடப்பு கூட்டத்தொடரிலே மசோதாவை தாக்கல் செய்ய மத்திய அரசு ஆயத்தமாகி உள்ளது. இந்த சூழலில் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் மாநிலங்களையே ஒழிக்கத் தான் 'ஒரே நாடு - ஒரே தேர்தல்' திட்டம் வழிவகுக்கும் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:- 'ஒரே நாடு - ஒரே தேர்தல்' மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் கொடுத்திருப்பது இந்திய ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் செயல். மத்தியிலும், மாநிலங்களிலும் சர்வாதிகாரத்திற்கு களம் அமைக்கும் சதித்திட்டம் இது. எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களை கவர்னர் மூலம் ஆளலாம் என்கிற தந்திரமும் இதில் உள்ளது.

இந்தியாவின் பன்முகத் தன்மையைச் சிதைத்து, மாநிலங்களின் உரிமைகளைப் பறித்து, கடைசியில் மாநிலங்களையே ஒழிக்க தான் 'ஒரே நாடு - ஒரே தேர்தல்' திட்டம் வழிவகுக்கும். பேராபத்தான இத்திட்டத்தை நமது கழகத் தலைவர் - முதல்-அமைச்சரின் தலைமையில் வலிமையுடன் எதிர்ப்போம்! மாநிலங்களைக் காப்போம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## சிறுவன் கொலை விவகாரம்:
# தமிழக அரசுக்கு இ.பி.எஸ். வலியுறுத்தல்

கோவில்பட்டி, டிச. 13-

தூத்துக்குடியில் சிறுவன் கொலையில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் கடந்த 9-ந் தேதி காணாமல் போன கருப்பசாமி என்ற சிறுவன், கடந்த 10-ந் தேதி மர்மமான முறையில் சடலமாக மீட்கப்பட்டதாக செய்திகள் வந்த நிலையில், இன்று அச்சிறுவனின் பெற்றோர் மற்றும் தாத்தா ஆகியோர் தங்களது உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

சிறுவன் கழுத்தில் இருந்த நகை மாயமாகி உள்ள நிலையில், புகார் அளித்த அன்றே தீவிரமாக காவல்துறை விசாரித்திருந்தால் சிறுவனை காப்பாற்றியிருக்கலாம் என்று குடும்பத்தார் புகார் தெரிவித்துள்ளனர்.

தி.மு.க. அரசின் காவல்துறை, முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் மெத்தனப் போக்கில் செயல்படுவது கடும் கண்டனத்திற்குரியது. இது தான் சட்டம் ஒழுங்கை ஒரு முதலமைச்சர் நேரடி கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் விதமா மு.க.ஸ்டாலின்?

சிறுவனின் பெற்றோர் மற்றும் தாத்தாவிற்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிப்பதுடன், சிறுவன் கொலை செய்யப்பட்ட வழக்கில் தொடர்புள்ள அனைவரையும் உடனடியாக கைது செய்து தக்க சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என மு.க.ஸ்டாலினின் தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தான் சிறையில் உள்ள
# தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது
## தமிழக முதல்வருக்கு மத்திய அரசு கடிதம்

சென்னை, டிச. 13-

பாகிஸ்தான் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க இந்திய அரசால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமிழக முதல்வருக்கு வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த 7 மீனவர்களுடன் சேர்த்து 14 இந்திய மீனவர்கள் குஜராத்தின் போர்பந்தரில் இருந்து மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், 3-1-2024 அன்று பாகிஸ்தான் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில், கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடி இயந்திரப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை வலியுறுத்தி தமிழ முதல்வர் மு.க.ஸ்டாலின் நவ.20ம் தேதியன்று கடிதம் எழுதியிருந்தார்.

பாகிஸ்தான் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க இந்திய அரசால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறி, வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கடந்த கடந்த டிச.6ம் தேதியன்று பதில் கடிதம் அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில், "பாகிஸ்தான் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 14 மீனவர்களையும், அவர்களது 'ஸ்ரீ வ்ராஜ் பூமி' மற்றும் 'மந்தீப்' பெயர் கொண்ட படகுகளையும் பாகிஸ்தான் அதிகாரிகள் 3-1-2024 அன்று சிறைபிடித்தனர்.

இதையறிந்த இந்திய அரசு, கைது செய்யப்பட்ட மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க ஏதுவாக, பாகிஸ்தான் அரசின் கவனத்துக்கு இதனைக் கொண்டு சென்றுள்ளது. மீனவர்களுக்கு தூதரக அனுமதி கோரப்பட்டுள்ள நிலையில், பாகிஸ்தான் அதிகாரிகளால் இதுவரை அது வழங்கப்படவில்லை. இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரகம், சிறைபிடிக்கப்பட்டுள்ள 14 மீனவர்களுக்கும் விரைவில் தூதரக அனுமதி கிடைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து செய்து வருகிறது.

மீனவர்கள் இந்தியாவுக்குத் திரும்பி அனுப்பப்படும் வரை அவர்களது பாதுகாப்பு மற்றும் உடல்நலனை உறுதி செய்யுமாறு பாகிஸ்தானிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இந்திய தூதரகம் இதைத் தொடர்ந்து கண்காணித்து, மீனவர்களை முன் கூட்டியே விடுவிப்பதற்கும், தாயகம் திரும்புவதற்கும் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்" என்று வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

## உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற
# குகேசால் இந்தியாவிற்கு பெருமை: ஜனாதிபதி, பிரதமர் மோடி வாழ்த்து

புதுடெல்லி, டிச. 13-

உலக சாம்பியன் பட்டம் வென்ற தமிழக செஸ் வீரர் குகேசுக்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**சிங்கப்பூரில்...**

இந்திய கிராண்ட்மாஸ்டர் குகேஷ், நடப்பு சாம்பியன் சீனாவின் டிங் லிரென் இடையிலான உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடந்து வந்தது. 14 சுற்று கொண்ட இந்த போட்டியில் 13 சுற்றுகள் நிறைவடைந்த நிலையில், குகேசும், லிரெனும் தலா இரு ஆட்டங்களில் வெற்றி பெற்றிருந்தனர். மற்ற அனைத்து ஆட்டங்களும் டிராவில் முடிந்தன. முடிவில் இருவரும் தலா 6½ புள்ளிகளுடன் சமநிலையில் இருந்தனர்.

**விறுவிறுப்பாக...**

இந்த நிலையில், நேற்று 14-வது மற்றும் கடைசி சுற்று நடைபெற்றது. இதில் குகேஷ், கருப்பு நிற காய்களுடன் விளையாடினார். இந்த போட்டி நேற்று பிற்பகலில் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்றது. இருவரும் தங்களது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தனர். போட்டி சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்று வந்தது. தொடக்கம் முதலே இருவரும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியதால், டிராவை நோக்கியே போட்டி செல்லும் என எதிர்பார்க்கப்பட்டது.

**18 வயதிலேயே...**

ஆனால் சற்றும் எதிர்பாரா வகையில், 58-வது நகர்த்தலில் டிங் லிரெனை (7.5 - 6.5 என்ற புள்ளிக் கணக்கில்) வீழ்த்தி குகேஷ் வெற்றி பெற்றார். இதன் மூலம் தமிழக வீரரான குகேஷ் உலக சாம்பியன் ஆனார். இதன் மூலம் 18 வயதிலேயே உலக செஸ் சாம்பியனாகி குகேஷ் வரலாறு படைத்துள்ளார். உலக சாம்பியன் பட்டம் வென்ற குகேசுக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

**சதுரங்க சக்தியாக...**

இதுதொடர்பாக ஜனாதிபதி திரௌபதி முர்மு தனது எக்ஸ் வலைதளத்தில், "உலக செஸ் சாம்பியன்ஷிப்பை வென்ற இளம் வீரர் குகேசுக்கு மனமார்ந்த வாழ்த்துகள். அவர் இந்தியாவிற்கு பெருமை சேர்த்துள்ளார். அவரது வெற்றி இந்திய அதிகாரத்தை ஒரு சதுரங்க சக்தியாக முத்திரை குத்துகிறது. சபாஷ் குகேஷ்! ஒவ்வொரு இந்தியர் சார்பாகவும், நீங்கள் எதிர்காலத்தில் புகழ் பெற வாழ்த்துகிறேன்" என்று அதில் அவர் பதிவிட்டுள்ளார்.

**வரலாற்றில் பெயர்...**

இதுதொடர்பாக பிரதமர் மோடி தனது எக்ஸ் வலைதளத்தில், "இது ஒரு வரலாறு மற்றும் முன்மாதிரி..! அவரது குறிப்பிடத்தக்க சாதனைக்கு குகேஷ்-க்கு வாழ்த்துகள். இது அவரது ஒப்பற்ற திறமை, கடின உழைப்பு மற்றும் தளராத உறுதி ஆகியவற்றின் விளைவே அவரது வெற்றி, சதுரங்க வரலாற்றின் வரலாற்றில் அவரது பெயரை பொறித்தது மட்டுமல்லாமல், மில்லியன் கணக்கான இளம் மனங்களை பெரிய கனவு காணவும், சிறந்து விளங்கவும் தூண்டியது. அவரது எதிர்கால முயற்சிகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்" என்று அதில் அவர் பதிவிட்டுள்ளார்.

## சாத்தனூர் அணையில் இருந்து
# தென்பெண்ணை ஆற்றில் 13,000 கனஅடி நீர் திறப்பு
## 4 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

தி.மலை, டிச. 13-

கனமழை காரணமாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் அணையில் இருந்து தென்பெண்ணையாற்றில் விநாடிக்கு 13,000 கனஅடி தண்ணீர் நேற்று (டிச.12) திறந்து விடப்பட்டது. இதனால் திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர் ஆகிய நான்கு மாவட்டங்களின் கரையோர கிராமங்களுக்கு 6-வது வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

ஃபெஞ்சல் புயல் தாக்குதலை தொடர்ந்து, காற்றழுத்த தாழ்வு பகுதியால், திருவண்ணாமலை மாவட்டத்தில் நேற்று (டிச.12) அதிகாலையில் இருந்து மீண்டும் மழை பெய்து வருகிறது. இதனால், மாவட்டத்தில் முக்கிய அணையான சாத்தனூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், அணையில் இருந்து தென்பெண்ணையாற்றில் விநாடிக்கு 13 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

119 அடி உயரம் உள்ள சாத்தனூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை 6 மணி நிலவரப்படி 117.50 அடியாக இருந்தது. அணைக்கு வந்த, விநாடிக்கு 2,500 கனஅடி தண்ணீரும், தென்பெண்ணையாற்றில் முழுமையாக வெளியேற்றப்பட்டது. அணையில் 6,986 மில்லியன் கனஅடி தண்ணீர் உள்ளது. அணைப் பகுதியில் 18.2 மி.மீ. மழை பெய்தது.

இந்நிலையில், கிருஷ்ணகிரி அணை மற்றும் பாம்பாறு அணையில் இருந்து தண்ணீர் திறப்பது அதிகரிக்கப்பட்டதாலும், தென்பெண்ணையாறு நீர் பிடிப்பு பகுதியில் பெய்து வரும் கனமழையால் சாத்தனூர் அணைக்கு நீர்வரத்து கிடுகிடுவென அதிகரித்தது. விநாடிக்கு 2,500 கனஅடி நீர்வரத்து என்பது, பகல் 1 மணியளவில், விநாடிக்கு 8 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. இதனால், அணையில் இருந்து தென்பெண்ணையாற்றில் தண்ணீர் வெளியேற்றுவது படிப்படியாக விநாடிக்கு 5 ஆயிரம் கனஅடி, 10 ஆயிரம் கனஅடி, 13 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

சாத்தனூர் அணையின் நீர்மட்டம் நேற்று (டிச.12) காலை 6 மணி நிலவரப்படி 117.50 அடியாக இருந்தது. மொத்த கொள்ளளவில், ஒன்றரை அடி மட்டுமே குறைவாக இருந்தது. நீர்வரத்து தொடர்ந்ததால், அணையில் இருந்து தண்ணீரை வெளியேற்றப்பட்டது. இதனால் அணையின் நீர்மட்டம் 7 மணி நேரத்தில் அரை அடி குறைந்து 117 அடியாக இருந்தது. இதே நிலையை தொடர்ந்து பராமரிக்கப்பட்டன.

குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியால், கனமழைக்கு வாய்ப்பு உள்ளது என வானிலை ஆய்வு மையம் கடந்த ஒரு வாரமாக எச்சரித்து வந்தபோதும், 119 அடி உயரம் கொண்ட அணையின் நீர்மட்டத்தை முன்கூட்டியே குறைக்கவில்லை. அணையின் நீர்மட்டம் கடந்த ஒரு வாரமாக 117.95 அடியாக பராமரிக்கப்பட்டுள்ளது. முழு கொள்ளளவுக்கு ஒரு அடி மட்டுமே குறைவாக வைக்கப்பட்டிருந்தது.

இதன் எதிரொலியாக, அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியதும், அணையில் இருந்து தென்பெண்ணையாற்றில் வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்கூட்டியே அணையின் நீர்மட்டத்தை, குறைந்தபட்சம் 4 அடி வரை குறைவாக வைத்திருந்தால், அணையில் இருந்து தண்ணீர் வெளியேற்றப்படுவதும், குறைவாகவே இருந்திருக்கும். இதேபோன்று, ஃபெஞ்சல் புயலுக்கு அதி கனமழை பெய்த போது, 117 அடி வரை நீர்மட்டம் இருந்ததால், ஒரே நேரத்தில் விநாடிக்கு 1.68 லட்சம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டதால், 4 மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கியது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், நீர்வளத் துறை வெளியிட்டுள்ள 6-வது வெள்ள அபாய எச்சரிக்கை செய்திக் குறிப்பில், "கிருஷ்ணகிரி அணை மற்றும் பாம்பாறு அணையில் இருந்து தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் சாத்தனூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, அணையில் இருந்து தென்பெண்ணையாற்றில் படிப்படியாக தண்ணீர் திறப்பது அதிகரிக்கப்படும். திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் செல்லும் தென்பெண்ணையாறு கரையோர கிராமங்களில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று கார்த்திகை தீபத் திருவிழா:
# கொட்டும் மழையில் தி.மலை உச்சிக்கு எடுத்து செல்லப்பட்ட தீபக் கொப்பரை

தி.மலை, டிச. 13-

திருவண்ணாமலை கார்த்திகைத் தீபத் திருவிழாவையொட்டி 2,668 அடி உயரம் உள்ள திரு அண்ணாமலை உச்சிக்கு மகா தீபக் கொப்பரை நேற்று (டிசம்பர் 12-ம் தேதி) கொண்டு செல்லப்பட்டது.

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் கார்த்திகைத் தீபத் திருவிழா, காவல் தெய்வமான துர்க்கை அம்மன் உற்சவத்துடன் கடந்த 1-ம் தேதி தொடங்கியது. பிடாரி அம்மன், விநாயகர் உற்சவங்கள் அடுத்தடுத்த நாட்களில் நடைபெற்றது. பின்னர் மூலவர் சந்நிதி முன்பு உள்ள தங்கக் கொடிமரத்தில் கடந்த 4-ம் தேதி கொடியேற்றப்பட்டது, 10 நாள் உற்சவம் ஆரம்பமானது. இதில் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான மகா தேரோட்டம் கடந்த 10-ம் தேதி வெகு சிறப்பாக நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து கார்த்திகைத் தீபத் திருவிழா



இன்று (டிசம்பர் 13-ம் தேதி) நடைபெற உள்ளது. மூலவர் சந்நிதியில் அதிகாலை 4 மணிக்கு பரணி தீபமும், மலையே மகேசன் என போற்றப்படும் 2,668 உயரம் உள்ள திரு அண்ணாமலை உச்சியில் மாலை 6 மணிக்கு பரணி தீபமும் ஏற்றப்பட உள்ளன. மகா தீபத்தை பல வகையான துணிகளும் சமூகத்தில் ஏற்ற உள்ளனர். மகா தீப தரிசனத்தை தொடர்ந்து 11 நாட்களுக்கு காணலாம்.

இந்நிலையில், அண்ணாமலையார் கோயிலில் மகா தீபம் ஏற்றப்பட உள்ள கொப்பரைக்கு நேற்று (டிசம்பர் 12-ம் தேதி) அதிகாலை சிறப்பு பூஜை நடைபெற்றது. பின்னர், 2,668 அடி உயரம் உள்ள திரு அண்ணாமலையின் உச்சிக்கு கொப்பரை கொண்டு செல்லப்பட்டது. அண்ணாமலையாருக்கு அரோகரா என்ற முழக்கத்துடன், இதற்கான பணியில் ஈடுபடும் பக்தர்கள் கொண்டு சென்றனர். மகா தீபக் கொப்பரையில் சிவ சிவ என எழுதப்பட்டும், ஆண் - பெண் சமம் என்பதை உணர்த்தும் அர்த்த நாரீஸ்வரர் படம் வரையப்பட்டிருந்தது. இதேபோல், மகா தீபம் ஏற்ற பயன்படுத்தப்படும் 4,500 கிலோ நெய் மற்றும் திரி-க்காக ஆயிரத்து 500 மீட்டர் காடா துணி ஆகியவை அடுத்தடுத்து கொண்டு செல்லப்பட உள்ளன.

## நாட்டு மக்களுக்கு நன்றி:
# தமிழக வீரர் குகேஷ் நெகிழ்ச்சி




சிங்கப்பூர், டிச. 13-

என்னை நேசித்த நாட்டு மக்களுக்கு இந்த வெற்றியை அர்ப்பணிக்கிறேன் என்று உலக செஸ் சாம்பியன் குகேஷ் தெரிவித்துள்ளார்.

**சாம்பியன் பட்டம்...**

இந்திய கிராண்ட்மாஸ்டர் குகேஷ், நடப்பு சாம்பியன் சீனாவின் டிங் லிரென் இடையிலான உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடந்து வந்தது. 14 சுற்று கொண்ட இந்த போட்டியில் 13 சுற்றுகள் நிறைவடைந்த நிலையில், நேற்று 14-வது மற்றும் கடைசி சுற்று நடைபெற்றது. இதில் குகேஷ், கருப்பு நிற காய்களுடன் விளையாடினார். இந்த போட்டி நேற்று பிற்பகலில் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்றது. சற்றும் எதிர்பாரா வகையில், 58-வது நகர்த்தலில் டிங் லிரெனை (7.5 - 6.5 என்ற புள்ளிக் கணக்கில்) வீழ்த்தி குகேஷ் வெற்றி பெற்றார். இதன் மூலம் தமிழக வீரரான குகேஷ் உலக சாம்பியன் ஆனார். இதன் மூலம் 18 வயதிலேயே உலக செஸ் சாம்பியனாகி குகேஷ் வரலாறு படைத்துள்ளார்.

**தீவிர பயிற்சிக்கு பின்...**

வெற்றிக்குப்பின் செய்தியாளர்களிடம் பேசிய குகேஷ், "போட்டிக்கு உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் தயாராகி வந்தேன். இரண்டு வருட தீவிர பயிற்சிக்கு பின் கிடைத்த வெற்றி இது. ஒரு இளம் செஸ் வீரனின் கனவு எதுவோ அது நிறைவேறியுள்ளது. 10 வருட பயிற்சியின் விளைவாக இந்த சாதனையை படைத்துள்ளேன். சாம்பியன் பட்டத்தை மீண்டும் கொண்டு வரக்கூடியநபராக இருக்க விரும்பினேன்.

**தற்போது சாம்பியன்...**

11 ஆண்டுகளுக்கு முன் சாம்பியன் பட்டம் இந்தியா வுடன் பறிக்கப்பட்டது. தற்போது உலக சாம்பியன் ஆன மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கிறேன். லீடன் தோல்வி அடைந்ததற்காக எனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். என்னை நேசித்த நாட்டு மக்களுக்கு இந்த வெற்றியை அர்ப்பணிக்கிறேன்" என்று அவர் கூறினார். உலக சாம்பியன் பட்டம் வென்ற குகேசுக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வாழ்த்துகள் குவிந்து வருகின்றன. வெற்றி பெற்றுள்ள குகேசுக்கு இந்திய மதிப்பில் ரூ. 20.8 கோடி பரிசுத்தொகையாக வழங்கப்படுகிறது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

## கேரளா, பாலக்காட்டில் பயங்கரம்:
# நடந்து சென்ற மாணவிகள் மீது லாரி கவிழ்ந்ததில் 4 பேர் பலி

பாலக்காடு, டிச. 13-

கேரள மாநிலம் பாலக்காட்டில் சாலையோரம் நடந்து சென்ற மாணவிகள் மீது லாரி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 4 பேர் பலியான சம்பவம் அரங்கேறியுள்ளது.

கேரள மாநிலம் பாலக்காட்டில் உள்ள பனையம்பாடம் என்ற பகுதியில் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது. பள்ளி முடிந்து மாணவ, மாணவியர் சாலையோரமாக நடந்துசென்று கொண்டிருந்தனர். மேலும் சிலர் அருகில் இருந்த பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக காத்துக்கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக சிமெண்டு ஏற்றிக்கொண்டு வந்த லாரி ஒன்று திடீரென கட்டுப்பாட்டை இழந்து சாலையோரமாக நடந்து சென்ற மாணவ, மாணவிகள் மீது கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில், லாரிக்கு அடியில் சிக்கி 4 மாணவிகள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் சிலர் படுகாயமடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த விபத்து தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மோசமான நிலையில் உள்ள சாலையை சரி செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம் சாட்டிய அப்பகுதியினர், இந்த சாலையால் பல விபத்துகளும், உயிர் பலி ஏற்படுவதாகவும் தெரிவித்தனர்.

## தொடர் மழை எதிரொலி:
# சதுரகிரி செல்ல பக்தர்களுக்கு தடை

வத்திராயிருப்பு, டிச. 13-

தொடர் மழை காரணமாக சதுரகிரி செல்ல பக்தர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோவில் அமைந்துள்ளது. சதுரகிரி மலை கோவில் கடல் மட்டத்தில் இருந்து சுமார் 4,500 அடி உயரத்தில் உள்ளது. மாதம் தோறும் பிரதோஷம், அமாவாசை, பவுர்ணமி உள்ளிட்ட விசேஷ நாட்கள் மட்டுமே பக்தர்கள் இந்த கோவிலுக்கு செல்ல பல வேறு கட்டுப்பாடுகளுடன் வனத்துறை சார்பில் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

இந்த சூழலில் சதுரகிரி கோவிலில் கார்த்திகை மாத பிரதோஷம் மற்றும் பவுர்ணமி வழிபாட்டுக்காக நாளை முதல் 16-ந் தேதி வரை 4 நாட்கள் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய வனத்துறையினர் மற்றும் கோவில் நிர்வாகத்தினர் அனுமதி அளித்திருந்தனர். இதனிடையே வங்கக் கடலில் தோன்றிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு காரணமாக தமிழகம் முழுவதும் தற்போது பரவலாக மிதமான மழை முதல் கனமழை வரை பெய்து வருகிறது.

இந்நிலையில் கனமழை எச்சரிக்கை காரணமாக, சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோவிலுக்கு செல்லும் பக்தர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு
**மணப்பாறை நகராட்சி**

ந.க.எண். 2135 / 2024 / இ1 — ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு — நாள்:12.12.2024

மணப்பாறை நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2023-24ஆம் நிதி ஆண்டிற்கான Tied Grant ஒதுக்கீட்டின் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 27.12.2024 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்குள் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 25 ல் உள்ள பாத்திமாமலையில் 5.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி | 165.60 |

இதர விபரங்களை http://tnтenders.gov.in என்ற இணையதளம் முகவரியில் பார்த்து தெரிந்துகொள்ளலாம்.

ஆணையர்,
மணப்பாறை நகராட்சி

செ.ம.தொ.இ./5469/ஒப்பந்தப்புள்ளி / 2024

### அருப்புக்கோட்டை அருகே 500-வது

# குட்டை நிறைவு பணிகளை கொட்டும் மழையில் ஆய்வு செய்தார் அமைச்சர்





**அருப்புக்கோட்டை, டிச. 13-**

விருதுநகர் மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் உயரும் வகையிலும் கால்நடைகளுக்கு தண்ணீர் கிடைக்கும் வகையிலும் புதிதாக சுமார் 2000 குட்டைகள் தோண்ட மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது. அதன்படி அருப்புக்கோட்டை

அருகே தொட்டியாங்குளம் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் தலா ரூ 16 மற்றும் ரூபாய் 11 லட்சம் மதிப்பில் இரண்டு குட்டைகள் வெட்டப்பட்டுள்ளது. 2,000 குட்டைகள் வெட்டும் திட்டத்தில் 500 ஆவது குட்டையாக வெட்டப்பட்டு நிறைவு செய்த இந்த பணிகளை ஆட்சித் தலைவர் ஜெயசீலன் தலைமையில் அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் கொட்டும் மழையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமைச்சர் கூறியது.

விருதுநகர் மாவட்டத்தில் முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஆடு மாடுகள் தண்ணீர் குடிப்பதற்காகவும் நிலத்தடி நீர் பெருகுவதற்காகவும் 2,000 சிறிய அளவிலான குட்டைகள் தோண்டுவதற்கு முடிவு செய்யப்பட்டு தற்போது 500 ஆவது குட்டையை நிறைவு செய்துள்ளோம்.

பிப்ரவரி மாதத்திற்குள் விருதுநகர் மாவட்டத்தில் 2000 புதிய குட்டைகள் தோண்டி முடிக்கப்படும். நீர்நிலைகளை மேம்படுத்துவதற்காக முதலமைச்சர் ரூ 150 கோடியை அறிவித்துள்ளார். விருதுநகர் மாவட்டம் வறண்ட மாவட்டம், நிலத்தடி நீர்மட்டம், ஆடு மாடுகளுக்கும் தண்ணீர் தேவை உள்ளது. அதை கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் விரைவாக இந்த பணிகளை செய்து வருகிறார். என்றார்.

ஆய்வின்போது வருவாய் கோட்டாட்சியர் வள்ளிக்கண்ணு அருப்புக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காஜா மொய்தீன் நவாஸ், சூரிய குமாரி, முன்னா ள் ஒன்றிய பெருந்தலைவர் சுப்பாராஜ், ஒன்றிய செயலாளர பாலகணேஷ், பொன்ராஜ், அரசு அலுவலர்கள், மகளிர் மன்ற நிர்வாகிகள், கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

### ராமநாதபுரத்தில்

# நடிகர் ரஜினி பிறந்த நாள் விழா

**ராமநாதபுரம், டிச.13-**

ராமநாதபுரத்தில் நடிகர் ரஜினிகாந்த் பிறந்தநாளையொட்டி ரசிகர் மன்றம் சார்பில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கோவிலில் சிறப்பு அர்ச்சனை நடைபெற்றது.

நடிகர் ரஜினிகாந்த் பிறந்த நாளை முன்னிட்டு ராமநாதபுரம் மாவட்ட தலைமை ரஜினிகாந்த் ரசிகர் நற்பணி மன்றம் சார்பில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கோவில்களில் சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது. ராமநாதபரம் மாவட்ட ரசிகர் மன்ற தலைவர் பாபு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், கௌரவத் தலைவர் கபிலர், துணைத் தலைவர் இளங்கோவன், துணைச் செயலாளர்கள் ராஜா, வெள்ளைச்சாமி, நகர் செயலாளர் கணேச மூர்த்தி உள்படப லர் கலந்து கொண்டனர். ராமநாதபுரம் வழிவிடு முருகன் கோவிலில் ரஜினிகாந்த் பிறந்தநாளையொட்டி அவரது பெயரில் சிறப்பு அர்ச்சனை நடைபெற்றது. இந்த சிறப்பு பூஜையில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில், ரஜினி மன்ற நிர்வாகிகள் கணேசன், மணிகண்டன், காளிதாஸ், சிவக்குமார் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

**மரம் மனிதனின் உரம்**

### துணை முதல்வர் உதயநிதி பிறந்த நாள் விழா:

# விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவைரவன் தலைமையில் நலத்திட்ட உதவிகள்

### மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் வழங்கினார்



**மதுரை, டிச.13-**

மதுரை தெற்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்தி வைரவன் தலைமையில் பெருங்குடியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை தெற்கு மாவட்ட செயலாளர் மு மணிமாறன் வழங்கினார்

தி. மு. க. இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலினின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்தி வைரவன் தலைமையில் பெருங்குடியில் சுமார் 1000-த்திற்கும் மேற்பட்ட நலத்திட்ட உதவிகளை தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் கலந்துகொண்டு வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் தொகுதி பொறுப்பாளர் வனராஜா, திருப்பரங்குன்றம் கிழக்கு ஒன்றிய செயலாளர் தனபால்,முன்னாள் எம். எல். ஏ. முத்துராமலிங்கம், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் விமல், கள்ளிக்குடி மதன்குமார் ,செல்லம்பட்டி முத்துராமன், வழக்கறிஞர் மணி சேகரன், கீழக்குயில்குடி வி.ஆர். செல்வந்திரன், ராஜசேகர்,அருண், பாசபிரபு, பெருங்குடி ராஜேந்திரன்,வழக்கறிஞர் தமிழ்ராஜா, ஆறுமுகம்,காளி, பெருங்குடி வசந்த், பிரவீன், விளையாட்டு அணி துணை அமைப்பாளர்கள் எல்ஐசி மாரியப்பன், கணேஷ்குமார், மாரி ராஜா, சரவண கார்த்தி, கோகுல சிவலிங்கம் மற்றும் நாகமலை பப்பு உட்பட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திண்டுக்கல் மேட்டுப்பட்டியில்

# ஸ்ரீ ஐயப்பன் கோவில் கும்பாபிஷேக விழா



**திண்டுக்கல் டிச. 13-**

திண்டுக்கல் மேட்டுப்பட்டியில் ஸ்ரீ ஐயப்பன் கோவில் கும்பாபிஷேக விழா கொட்டும் மழையில் வெகு விமர்சையாக நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

திண்டுக்கல் மேட்டுப்பட்டி மீனாட்சி நகரில் அருள்மிகு ஐயப்பன் திருக்கோயில் புதிதாக அமைக்கப்பட்டு திருப்பணிகள் நிறைவேற்று கும்பாபிஷேக விழா நடைபெற்றது. பரிவார தெய்வங்களான ஸ்ரீ வெற்றி விநாயகர் ஸ்ரீ வெற்றிவேல் முருகன் ஸ்ரீ கருப்பண்ணசாமி ஸ்ரீ கருப்பாய அம்மாள் ஸ்ரீ மஞ்சமாதா ஸ்ரீ நாகராஜா ஆகிய சுவாமிகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு கடந்த 11ஆம் தேதி மங்கள இசை விக்னேஸ்வர பூஜை, மகா கணபதி லட்சுமி இலக்கணம் ஹோமங்கள் கோபூஜை திரவியங்கள் சமர்ப்பணம் பூர்ணா குதியுடன முதல் கால பூஜை தொடங்கியது.

தொடர்ந்து நான்காம் கால பூஜை ஆக நேற்று காலை வேதா பாராயணம் நாடி சந்தானம் த்ராவியா குதி பூர்ணா குதியுடன் நிறைவுற்றது. தொடர்ந்து புனித தீர்த்தங்கள் அடங்கிய கலசங்களின் கடம் புறப்பாடு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து கோபுர விமானங்களில் மற்றும் சுவாமி விக்கிரங்களுக்கு சிவாச்சாரியார்கள் புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் கலசங்களுக்கு தீப தூப ஆராதனை காண்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து புனித நீர் பக்தர்கள் மீது தெளிக்கப்பட்டது.

திண்டுக்கல் மாநகரில் உள்ள பக்தர்கள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் ஏராளமானோர் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு சுவாமிகள் தரிசனம் பெற்று சென்றனர். கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

ஸ்ரீ ஐயப்பன் தியான மண்டப திருக்கோயில் கோவில் நிர்வாகத்தினர் ஐயப்ப பக்தர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கும்பாபிஷே விழாவிற்கான ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

### நடிகர் ரஜினிகாந்தின் 74-வது பிறந்தநாளை முன்னிட்டு

# திருமங்கலம் ஸ்ரீ ரஜினி கோவிலில் உற்சவர் சிலை பிரதிஷ்டை செய்து சிறப்பு வழிபாடு



**திருமங்கலம். டிச. 13-**

மதுரை மாவட்டம்,திருமங்கலம் நகரில் நடிகர் ரஜினிகாந்தின் தீவிர பக்தரும், முன்னாள் ராணுவ வீரருமான எஸ்.கார்த்திக்,இந்தியாவிலே முதல் முறையாக மூன்று அடி உயர கருங்கல் சிலையுடன் அமைத்துள்ள அருள்மிகு ஸ்ரீ ரஜினி கோவிலில் நாள் தோறும் பூஜைகள் நடத்தப்பட்டு வருகிறது.ரஜினி பக்தர்களின் ஆன்மீக திருத்தலமாக திகழ்ந்திடும் இங்கு சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்தின் 74-வது பிறந்த தின விழா நேற்று ரஜினி சதுர்த்தியாக நேற்று கொண்டாடப்பட்டது.

இதையொட்டி ஸ்ரீ ரஜினி கோவிலில் உள்ள ரஜினியின் 3அடி உயர மூலவர் திருவுருச்சிலைக்கு திருவாச்சியும், நாககிரீடமும் சாத்தப்பட்டு பல்வேறு அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டது.அத்துடன் மூலவர் ரஜினிகாந்த் சிலைக்கு இணையாக 300கிலோ எடையுடன் மூன்றரை அடி உயரம் கொண்ட உற்சவர் ரஜினி சிலை யாக சாலை பூஜைகள் நடத்தி வேதமந்திரங்கள் முழங்கிட பிரதிஷ்டை செய்யப்பட்டது.

பின்னர் உற்சவர் சிலைக்கு பால்,பன்னீர்,புஷ்பம்,சந்தனம் உள்ளிட்ட பல்வேறு அபிஷேகம் தீபாராதனை நடத்தப்பட்டு சிறப்பு பூஜைகளுடன் வழிபாடு நடைபெற்றது.இந்த வழிபாடு நிகழ்வுகளை தீவிர ரஜினி பக்தரும்,முன்னாள் ராணுவ வீரரும்,திருமங்கலம் அருள்மிகு ஸ்ரீ ரஜினி கோவில் நிறுவனருமான எஸ்.கார்த்திக் முன்னின்று நடத்தினார்.

இதனை தொடர்ந்து ரஜினிகாந்தின் 74வது பிறந்த நாள் விழா சிறப்பு பூஜைகளில் பங்கேற்றவர்களுக்கு அருள்மிகு ஸ்ரீ ரஜினி கோவிலின் சார்பில் பிரசாதமும் அன்னதானமும் வழங்கப்பட்டது.இதுகுறித்து திருமங்கலம் ஸ்ரீ ரஜினி கோவில் நிறுவனர் எஸ்.கார்த்திக் கூறுகையில்: ஆன்மீக கடவுளாக திகழ்ந்திடும் ரஜினிகாந்தின் 74-வது பிறந்த நாளை முன்னிட்டு திருமங்கலம் நகர் ஸ்ரீ ரஜினி கோவிலில் ரஜினி சதுர்த்தி தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அப்போது மூலவர் ரஜினி திருவுருவச் சிலைக்கு இணையாக மூன்றரை அடி உயரத்துடன் 300கிலோ எடையுள்ள கருங்கல்லில் செய்யப்பட்ட உற்சவர் ரஜினி சிலைக்கு யாகசாலை பூஜைகள் நடத்தி பிரதிஷ்டை செய்யப்பட்டு அவர் நீடூழி பல்லாண்டு வாழ்ந்திட சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது. அத்துடன் 74வது பிறந்தநாள் காணும் ரஜினிகாந்திற்கு 74மொழிகளில் தயார் செய்யப்பட்ட வாழ்த்து அட்டையும் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இருப்பினும் ரஜினிகாந்த் தன்னை அழைத்து நேரில் சந்தித்திடும் நாளே தனக்கு பொன்நாள் என்று தெரிவித்தார்.திருமங்கலம் நகர் ஸ்ரீ ரஜினி கோவிலில் ரஜினிசதுர்த்தி சிறப்பு பூஜைகள் சிறப்புடன் நடைபெற்ற நிகழ்வு ரஜினி பக்தர்கள் மற்றும் ரசிகர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# ஸ்ரீவில்லிபுத்தூரில் பெருமாளுக்கு போர்வை சாற்றும் வைபவம்

### ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு



**விருதுநகர் ,டிச. 13-**

ஸ்ரீவில்லிபுத்தூரில் பெருமாளுக்கு போர்வை சாற்றும் வைபவத்தில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் வடபத்ரசயனர் (பெரிய பெருமாள்) சன்னதியில் கைசிக ஏகாதசியை முன்னிட்டு நேற்றுப காலை 108 போர்வை சாற்றும் வைபவம் நடைப்பெற்றது.

ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம், ஶ்ரீவைகுண்டம் வைணவ திருத்தலங்களில் கார்த்திகை மாத கைசிக ஏகாதசி அன்று குளிர்காலம் தொடங்க உள்ளதை முன்னிட்டு பெருமாள் மாற்றும் ஆழ்வார்களுக்கு 108 போர்வை சாற்றப்பட்டு கைசிக புராணம் வாசிக்கப்படும். அதன்படி இந்த ஆண்டு கைசிக ஏகாதசியை முன்னிட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் பெரிய பெருமாள் சன்னதிதி முன் உள்ள பகல் பத்து மண்டபம் எனப்படும் கோபாலாவிசால மண்டபத்தில் ஶ்ரீதேவி பூதேவி சமேத பெரிய பெருமாள்,ஆண்டாள் ரெங்கமன்னார், கருடாழ்வார், பெரியாழ்வார் மற்றும் 12 ஆழ்வார்கள் எழுந்தருளினர்.

கைசிக ஏகாதசி அன்று மட்டும் கருடாழ்வார் சன்னதியிலிருந்து புறப்பாடாகி பகல் பத்து மண்டபம் எழுந்தருளுவார். அங்கு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு அதிகாலை 4 மணி முதல் ஆண்டாள், ரெங்கமன்னார், ஸ்ரீதேவி பூதேவி சமேத பெரிய பெருமாள், ஆழ்வார்கள், ஆச்சாரியர்களுக்கு 108 போர்வை சாற்றும் வைபவம் நடைபெற்றது.

இதில் அரையர் சேவை, கைசிகபுராணம் வாசிக்கப்பட்டது. இதில் ஸ்ரீவில்லிபுத்தூர் சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# நரிப்பையூர் கடற்கரையில் தடுப்பு சுவர் கட்ட வேண்டும்

### யூனியன் கூட்டத்தில் ஒன்றிய கவுன்சிலர் கோரிக்கை



**கடலாடி, டிச. 13-**

ராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் கூட்டம் ஒன்றிய பெருந் தலைவர் முத்துலெட்சுமி முனியசாமிபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. ஆணையாளர் ஜெயஆனந்த் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் முருகவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மொத்தம் 17 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் ஒன்றிய கவுன்சிலர்கள் கூறியதாவது. ராஜேந்தின் : சிறைக்குளம் ஊராட்சி மற்றும் தனிச்சியம் ஊராட்சிக்கு காவேரி குடிநீர் வரவில்லை. இதனால் பொதுமக்கள் ஊரனி நீரை குடிப்பதால் பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுகிறது. குடிநீர் வாரிய பொறியாளரிடம் பேசி குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

துணை சேர்மன் ஆத்தி:கண்ணிராஜபுரம் ஊராட்சியின் அலுவலக கட்டிடத்தை பஸ் நிலையம் அருகே கட்ட வேண்டும். ரோஜ்மாநகர் கிராமத்தில் ஹைமாஸ் விளக்கு எரியவில்லை. பழுதுபார்க்க வேண்டும். ஆணையாளர் ஜெய ஆனந்த் : உடனடியாக பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கபடும் . ஊராட்சி கட்டிடம் கட்டுவதற்கு ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி கட்டிடம் கட்ட ஊராட்சிநிர்வாகம் தான் முடிவு செய்ய வேண்டும்.

முருகன் : நரிப்பையூர் கடற்கரையில் அரிப்பு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் உள்ளது.கடல் தண்ணீர் ஊருக்குள் வரும் நிலையில் உள்ளது. நரிப்பையூர் கடல் பகுதியில் தடுப்பு சுவர் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் .இவ்வாறு கவுன்சிலர்கள் பேசினர். ஒன்றிய கவுன்சிலர்கள் முனியசாமி பாண்டியன் ஜெயசந்திரன் குமரையா மேலாளர் முனியசாமி கணக்காளர். ரமேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# திருமங்கலம் அருகே அரசுப் பள்ளிக்கு ரூ.3 லட்சம் மதிப்பில் கல்வி உபகரணங்கள்

**திருமங்கலம், டிச. 13-**

மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகேயுள்ள போல்நாயக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு ரூ.3 லட்சம் மதிப்பிலான கல்வி உபகரணங்களை தனியார் அமைப்பினர் வழங்கினர்.

திருமங்கலம் அருகேயுள்ள போல்நாயக்கன்பட்டி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு 50க்கும் மேற்பட்ட குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். கிராமப்பகுதி என்பதால் குழந்தைகள் உட்காருவதற்காக சேர் நாற்காலிகள் இல்லாமல் தரையில் அமர்ந்து கல்வி பயின்று வந்துள்ளனர். இது தொடர்பாக சமூக சேவையில் ஆர்வம் கொண்ட தனியார் நிறுவனத்திற்கு சேர்கள் வழங்கிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து போல்நாயக்கன் பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு தனியார் நிறுவனத்தின் சார்பில் மாணவர்களுக்கு தேவையான இருக்கைகள், மேஜைகள், புத்தக ரேக்குகள் மற்றும் கல்வி உபகரணங்கள் உள்ளிட்ட ரூ.3 லட்சம் மதிப்பிலான பொருட்களை திருமங்கலம் வட்டார கல்வி அலுவலர் செல்வி முன்னிலையில் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வினில் தலைமை ஆசிரியர் ரோஜா, மண்டல மேலாளர் ஸ்ரீனிவாச ஆஞ்சநேய ரெட்டி, மேலாளர் ஜான்பீட்டர், ஏரியா மேலாளர் பொன்ராஜ், திட்டமிடல் கண்காணிப்பு குழு அசோக் ,ராம்குமார், சமூக ஆர்வலர் காளீஸ் உள்பட ஆசிரியைகள் பள்ளி மேலாண்மை குழுவினர் கலந்து கொண்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### நிலக்கோட்டை தாலுகாவில் உயர்நிலைப்பள்ளி

# அமைத்து தரக்கோரி சமுதாய ஆதரவு குழு கூட்டமைப்பு மனு



**வத்தலகுண்டு, டிச. 13-**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில், சமுதாய ஆதரவு குழு கூட்டமைப்பு சார்பாக வட்டாச்சியர் அலுவலகத்தில் வட்டாச்சியர் அவர்களிடம் . இந்த தாலுகாவில் இரண்டு லட்சத்து ஆயிரம் வாக்காளர்கள் மற்றும் ஆறு லட்சம் பொது மக்களும் வசித்து வருகின்றனர்.இதில் 11 ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை கல்வி கற்க கூடிய மாணவிகள் சுமார் 50,000 க்கு மேற்பட்டோர் உள்ளனர்.இங்கு நான்கு அரசு உதவி பெறும் பெண்கள் மேல்நிலை தனியார் பள்ளிகள் உள்ளன.இந்த பள்ளிகளில் பயில ரூபாய் 15,000 முதல் ரூபாய் 20,000 வரை கல்வி கட்டணம் கட்ட வேண்டிய நிலை உள்ளது.

பெரும்பாலான மாணவிகள் தொடர்ந்து கல்வி கற்காமல் வறுமையின் காரணமாக பள்ளியை விட்டு இடையிலே வெளியில் செல்லும் சூழ்நிலை உள்ளது.இதனை பயன்படுத்திக் கொண்டு பெற்றோர்கள் தாங்கள் பெண் குழந்தைகளை கட்டாயப்படுத்தி குழந்தை திருமணத்திற்கு தள்ளுகின்றனர். மேலும் திண்டுக்கல் மாவட்டத்தில் அதிக இள வயது திருமணம் நடைபெறும் தாலுகா எங்களது நீண்ட கால கோரிக்கையான நிலக்கோட்டையில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஏற்படுத்தி தர வேண்டும் என தாசில்தார் அவர்களிடம் மனு கொடுக்க பட்டது .

கல்வித்துறை முக்கியத்துவம் செலுத்தி தமிழக அரசு எங்களது கோரிக்கையான அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியை அமைத்து தருமாறு தலைவர்,தமிழ்நாடு சட்ட மன்ற பேரவை மனுக்கள் குழுவிடம் சமுதாய ஆதரவு குழு பரிந்துரை செய்யப்பட்டது.



● தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், கேரள முதல்வர் பினராயி விஜயன் ஆகியோர் நேற்று கேரள மாநிலம் வைக்கத்தில், வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் பெரியார் நூலகம் திறப்பு விழாவில், நினைவகத்தில் உள்ள தந்தை பெரியார் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் தி.க. தலைவர் கி.வீரமணி, அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, மு.வெ.சாமிநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




● தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கேரள மாநிலம் வைக்கத்தில், கேரள முதல்வர் பினராயி விஜயன் தலைமையில், தி.க. தலைவர் கி.வீரமணி முன்னிலையில் நடைபெற்ற வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில் 2024-ம் ஆண்டிற்கான வைக்கம் விருதை கர்நாடக மாநிலம், மைசூரு மாவட்டத்தை சேர்ந்த எழுத்தாளரும், சமூக ஆர்வலருமான தேவநூர மஹாதேவாவுக்கு வழங்கி சிறப்பித்தார்.



● தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று சென்னையில் நடைபெற்ற நடிகர் ஜெயராம் மகன் நடிகர் காளிதாஸ் ஜெயராம் - தாரிணி ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### தமிழகத்தில் மதுரை, தேனி உள்ளிட்ட

# 13 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

**சென்னை, டிச. 13-**

வங்கக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக, தமிழகத்தில் மதுரை, தேனி உள்ளிட்ட 13 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: நேற்று முன்தினம் (டிச.11) இலங்கை கடலோரப் பகுதிகளை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, நேற்று (டிச.12) மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவுகிறது. இது அடுத்த 12 மணி நேரத்தில், மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, படிப்படியாக வலுகுறைந்து தென்தமிழக பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக நிலவக்கூடும்.

இதன் காரணமாக, நேற்று (டிச.12) தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி,மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தென்காசி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதி கனமழையும், ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழையும் பெய்யக்கூடும்.

திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை, தேனி, விருதுநகர், கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் கன முதல் மிக கனமழையும், ராணிபேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர், திருச்சி, கரூர், திண்டுக்கல், திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

இன்று (டிச.13ம் தேதி), தென்தமிழகத்தில் அநேக இடங்களிலும், வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

டிச.14 மற்றும் டிச.15ம் தேதிகளில், தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். டிச.16ம் தேதி, கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் மற்றும் காரைக்கால் பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

டிச.17ம் தேதி, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், காரைக்கால் பகுதிகளில் கன முதல் மிக கனமழையும், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், புதுவை பகுதிகளில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## அந்தமான் கடல் பகுதியில்... (1-ம் பக்க தொடர்ச்சி)

டிச.15-ம் தேதியை ஒட்டி, அந்தமான் கடற்பகுதியை ஒட்டி ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதன் நகர்வு, அதனால், ஏற்படக்கூடிய மழை குறித்த விவரங்கள் கண்காணித்து பின்னர் தெரிவிக்கப்படும்'' என்றார்.

சில நேரங்களில் வானிலை ஆய்வு மையம் கொடுக்கும் ரெட் அலர்ட் உள்ளிட்ட எச்சரிக்கைகள் தவறிப் போகிறது, துல்லியமாக கணிக்க முடியாமல் போவது ஏன் என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், ''வானிலையியல் என்பது முழுமையாக அறிந்து கொள்ளப்பட்ட அறிவியல் கிடையாது. இன்றைய தினத்தில் நூறு சதவீதம் எப்போதுமே வானிலை கணிக்கக் கூடிய அளவில் கிடையாது.

ஒரு வானிலை நிகழ்வு என்பது பல விதமான காரணிகளால் நிகழக் கூடியது. சில சமயங்களில் அனைத்துமே ஒருங்கிணைந்து செய்ல்படும் போது கணிப்புகள் சரியாக இருக்கக்கூடிய வாய்ப்பிருக்கும். சில சமயங்களில் எதிரெதிர் திசைகளில் நகர்ந்து செல்லும்போது, வானிலை கணிப்புகள் தவறிப்போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, இதற்கு தொழில்நுட்பம் மட்டும் போதுமானது அல்ல. தொழில்நுட்பக் கருவிகள் வெறுமனே அளவீடுகளைத் தான் கொடுக்கும். அந்த அளவீடுகளை வைத்து என்ன செய்யப் போகிறோம் என்பது மிகவும் முக்கியமானது'' என்றார்.

### சமத்துவ எண்ணம் மக்கள் மனதில் வளர வேண்டும்:

# நாம் சாதிய பாகுபாடுகளுக்கு எதிராக போராட வேண்டும்

## வைக்கம் விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

**சென்னை, டிச. 13-**

நாம் சாதிய பாகுபாடுகளுக்கு எதிரான நமது போராட்டத்தை தொடர வேண்டும் என்று தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், யாரையும் தாழ்த்தி பார்க்காத சமத்துவ எண்ணம் மக்கள் மனதில் வளர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வைக்கம் நூற்றாண்டு நிறைவு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது., பெரியாருக்கு எதிராக யாகம் நடத்திய ஊரில் அவருக்கு புகழ் மாலை சூட்டப்பட்டுள்ளது. பெரியாருக்கு கிடைத்த புகழ் மாலைதான் திராவிடத்தின் வெற்றி. வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாவை காண கருணாநிதி இல்லையே என்ற வருத்தம் உள்ளது. எதற்கு அஞ்சாமல் பணியாற்றி சமூகத்தை விழிப்புடன் வெற்றி பெற வைத்தவர் பெரியார் என்று அண்ணா கூறினார்.

சமூக அரசியல் போராட்ட வெற்றியின் சின்னமாக வைக்கத்தில் பெரியார் நினைவகம் உள்ளது. வைக்கம் போராட்டம் எப்படி கம்பீரமானதோ அதை போல பெரியார் நினைவகமும் கம்பீரமானது. வைக்கத்தில் பெரியார் நினைவகம், நூலகம் திறந்து வைக்கப்பட்ட இந்நாள் சமூக நீதி வரலாற்றில் பொன்னெழுத்தளால் பொறிக்கப்பட வேண்டும். சமூக அரசியல் போராட்டத்தின் வெற்றியின் சின்னமாக வைக்கம் நினைவகம் அமைந்துள்ளது.

வைக்கம் ஒடுக்க முறையை எதிர்த்த கேரள காங்கிரஸ் தலைவர்கள் கைதாகினர்; வைக்கம் போராட்டத்தின் போது பெரியார் இரு முறை கைதானார். வைக்கம் போராட்ட நினைவு அஞ்சல் தலையை விரைவில் வெளியிட உள்ளோம். இனி நாம் அடையவிருக்கும் வெற்றிகளுக்கு அடையாளமாக வைக்கம் நினைவகம் இருக்கும். பெரியார் நினைவகத்தை திறந்து வைத்தது எனக்கு கிடைத்த வரலாற்று பெருமை.

பெரியார் நூலகம் கட்டிய கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு தமிழ்நாடு சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய அளவில் ஆளுமைமிக்க தலைவராக கேரள முதல்வர் பினராயி விஜயன் திகழ்கிறார். கேரளாவிற்கு வரும் அனைவரும் வைக்கம் நினைவகத்திற்கு வர வேண்டும். நாட்டில் சமூக நீதிக்கான தொடக்கப் புள்ளி வைக்கம் போராட்டமாக இருந்தது. வைக்கம் போராட்டத்திற்கு தமிழகத்தில் இருந்து பங்கேற்றவர்களின் பட்டியல் நீளமானது. வைக்கம் போராட்டத்தில் வெற்றி பெற்ற பெரியாரை 'வைக்கம் வீரர்' என திரு.வி.க. போற்றினார். சாதிய பாகுபாடுகளுக்கு எதிரான நமது போராட்டத்தை தொடர வேண்டும்.

100 ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட சமூக, அரசியல், பொருளாதார ரீதியாக முன்னேறியுள்ளோம். ஆனால் இன்னும் முன்னேற வேண்டியுள்ளது. எவ்வளவு சட்டங்கள் இயற்றினாலும் மக்கள் மனதில் மாற்றம் வேண்டும். எல்லோருக்கும் எல்லாம் என்பது திராவிட மாடல் அரசின் கொள்கையாகவே உள்ளது. தமிழ்நாட்டை போல கேரளாவிலும் முற்போக்குத் திட்டங்கள் நிறைவேற்றம்.

எல்லாவற்றையும் சட்டம் போட்டு மாற்றிவிட முடியாது. சட்டம் தேவைதான், அதைவிட மக்கள் மனமாற்றம் மிகவும் முக்கியம். யாரையும் தாழ்த்தி பார்க்காத சமத்துவ எண்ணம் மக்கள் மனதில் வளர வேண்டும். பகுத்தறிவு மற்றும் அரசியல் கண்ணோட்டத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். முன்பு இருந்ததைவிட வேகமாக செயல்பட வேண்டும்; நவீன வளர்ச்சியால் பாகுபாடுகளை நீக்க வேண்டும். சமநிலை சமூகத்தை அடைய நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஆளுங்கட்சி-எதிர்க்கட்சிகள் அமளி: பார்லி. மாநிலங்களை ஒத்திவைப்பு

**புதுடெல்லி, டிச. 13-**

காங்கிரஸுக்கும் - அமெரிக்க தொழிலதிபர் ஜார்ஜ் சோரஸுக்கும் தொடர்பு இருக்கிறது. நாட்டினை சீர்குலைப்பதற்காக பல பில்லியன் டாலர்கள் செலவு செய்யப்படுகிறது" என மாநிலங்களவையில் பாஜக தலைவர் ஜெ.பி. நட்டா பேசியதற்கு கண்டனம் தெரிவித்து காங்கிரஸ் எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டதால் அவை நேற்று மதியம் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் நண்பகலுக்கு முந்தைய அமர்வுக்கான அலுவல்களுக்கான ஆவணங்கள் வைக்கப்பட்ட பின்பு, அன்றைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கோரிய ஆறு நோட்டீஸ்களையும் அதில் கூறப்பட்டுள்ள விஷயங்களை நிராகரிப்பதாக அவைத் தலைவர் ஜக்தீப் தன்கர் அறிவித்தார். இதற்கு பல காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்நிலையில், காங்கிரஸ் தலைவரும், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே செய்தியாளர்கள் சந்திப்பில் அவைத்தலைவர் தன்கரை விமர்சித்ததை ஜெ.பி. நட்டா கண்டித்தார்.

பாஜக தலைவர் கூறுகையில், "அவைத் தலைவரின் தீர்ப்பினை கேள்வி கேட்கவோ, விமர்சிக்கவோ முடியாது. அவ்வாறு செய்வது அவையையும் தலைவரையும் அவமதிப்பதாகும். காங்கிரஸுக்கும் - அமெரிக்க தொழிலதிபர் ஜார்ஜ் சோரஸுக்கும் தொடர்பு இருக்கிறது. நாட்டினை சீர்குலைப்பதற்காக பல பில்லியன் டாலர்கள் செலவு செய்யப்படுகிறது. சோனியா காந்திக்கும் - சோரஸுக்கும் என்ன உறவு என்பதை அறிய நாடு விரும்புகிறது" என்றார். இதனால் அவையில் அமளி ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் கார்கே பதில் அளிக்க அவைத் தலைவர் அனுமதி அளித்தார். கார்கே கூறுகையில், "ஆளுங்கட்சி பிரச்சினைகளில் இருந்து கவனத்தை திசைத்திருப்ப விரும்புகிறது" என குற்றம் சாட்டினார். இதனால் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இடையே அமளி ஏற்பட்டதை அடுத்து மாநிலங்களவை மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.



● வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று, சென்னை நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் 2024-ம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்/ தனித்துணை ஆட்சியர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோரின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.



● சென்னை சர்க்கரை துறை அலுவலகத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தலைமையில் தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் மற்றும் தலைமை நிர்வாகிகளுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.